விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 06 வெள்ளிக்கிழமை (21.11.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 338

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL

CALL :- 222 5908/222 8812

# கிளிநொச்சியை பாதுகாப்பதென சபதம் ஏற்றிருக்கிறார் பிரபாகரன்

## சந்திரகாந்தன் எம்.பி நக்கீரனுக்குப் பேட்டி

(சென்னை)

தமிழ் மக்களை கண்மூடித்தனமாக இராணுவம் படுகொலை செய்கின்றது என்ற கவலையை அடிக்கடி வெளிப்படுத்துகிறார் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன். அவர் கிளிநொச்சியை பாதுகாப்பதெனவும் சபதம் ஏற்றிருக்கிறார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தமும் அரசியல் தீர்வும் சமநேரத்தில் முன்னெடுப்பு

### அரசு தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு மோதல்களை முன்னெடுத்திருக்கும் அதே சமயம் அரசியல் தீர்வொன்றை முன்வைப்பதற்கும் அரசாங்கம் சமாந்தரமாக நடவடிக்கை எடுத்திருப்பதாக ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருப்பதாலேயே அவர்களை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் கூறினார். மோதல்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கும் அதே சமயம் (12ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை முதல் கிளாலி வரையான புலிகளின் முன்னரங்கு படையினர் வசம்

### பிரிகேடியர் உதய நாணயக்கார தகவல்

(கொழும்பு)

முகமாலைமுதல் கிளாலி வரை அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு முன்னரங்கு நிலைகளை படையினர் நேற்று அதிகாலை முழுமையாக கைப்பற்றியதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக இடம்பெற்ற மோதலையடுத்து நேற்று அதிகாலை 5 மணியளவில் குறித்த நிலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது விடுதலைப் புலிகளுக்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன் படைத்தரப்புக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர் (12ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய அரசின் உதவிப் பொருட்கள் வன்னி மக்களிடம் ஒப்படைக்கப்படும்

### ஐ.சி.ஆர்.சி. உறுதியளிப்பு

(கொழும்பு)

இந்திய அரசாங்கம் கையளித்துள்ள ஆயிரத்து 680 மெற்றிக்தொன் நிவாரணப் பொருட்களையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வன்னியில் நேரடியாக இனங் காணப்பட்ட தேவை மதிப்பீட்டு அடிப்படையில் 25 ஆயிரம் குடும்பங்களுக்கு நேரில் கையளிக்கும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இலங்கைக்கான தூதுக் குழுவின் தலைவர் போல் கெஸ்டெல்லா தெரிவித்தார்.

இந்திய அரசாங்கம் கையளித்துள்ள பொருட்களை செஞ்சிலுவைச் சங்கம் கையளிக்குமா? அன்றேல் அரசாங்கம் கையளிக்குமா?என்ற கேள்விகள் மக்கள் மத்தியில் எழுகின்றன.

கடந்த சில தினங்களாக ஓமந்தைச் சோதனைச் சாவடி மூடப்பட்டுள்ள நிலையில் இந்தப் பொருட்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் உள்ள சிங்கள வைத்தியர்களுக்கு நேற்று முதல் இராணுவப் பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள சிங்கள வைத்தியர்களுக்கு பாதுகாப்பு வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள 41 சிங்கள வைத்தியர்கள் தமக்கு பாதுகாப்பு இல்லை எனத் தெரிவித்து நேற்று யாழ்.குடாநாட்டிலிருந்து வெளியேறத் தீர்மானித்தனர்.

இது தொடர்பாக யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஊடாக சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சுகாதார அமைச்சர், யாழ்.இராணுவக் கட்டளைத் தளபதி மற்றும் பொலிஸாருடன் தொடர்பு கொண்டு சிங்கள வைத்தியர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு பாதுகாப்பு வழங்க இராணுவம் மற்றும் பொலிஸார் இணங்கியதாக தகவல்கள் தெரிவித்தன.

இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பதில் பணிப்பாளர் என்.ரவிராஜ் தலைமையில் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அறையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் போதனா (12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி துருக்கி பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அடுத்த மாதம் 2ஆம் திகதி துருக்கி செல்லவுள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றின் போது கலந்து கொண்ட வெளி விவகார அமைச்சர் றோகித போகொல்லகம இதனைத் தெரிவித்தார். துருக்கி அரசாங்கத்தின் விசேட அழைப்பின் பேரிலேயே இந்த விஜயத்தை ஜனாதிபதி மேற்கொள்ள இருப்பதாக அவர் தெரிவித்தார். (ச-5)

உள்ளே...

தரிசனம்

## திருவாரூர் சென்ற ரணிலை வழி மறித்ததால் பரபரப்பு

(சென்னை)

தமிழகத்தில் திருவாரூர் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் காரை நூற்றுக் கணக்கான இந்திய கம்யூனிஸ்ட் தொண்டர்கள் வழிமறித்து கலகம் செய்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

நேற்றுக்காலை சென்னை சென்ற அவர் விமானம் மூலம் திருச்சி சென்றார்.

அங்கிருந்து திருவாரூர் சனீஸ்வரபகவான் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டார்.

பின்னர் காரில் திரும்பிக் கொண்டிருந்தார். அவரது காருக்கு முன்னும் பின்னும் ஏராளமான பொலிஸ் வாகனங்கள் சென்றன.

இந்த வாகன அணிவகுப்பு திருவாரூர் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி நோக்கிய யுத்தத்தை அரசு கட்டுப்படுத்த வேண்டும்

### ரணில் சென்னையில் வேண்டுகோள்



(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கைவசம் உள்ள வன்னிப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை கட்டுப்படுத்த வேண்டும். அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு உணவு, உடை, இருப்பிடம் மற்றுமுள்ள அடிப்படை வசதிகளை செய்து தரவேண்டும். மேலும் அவர்களுக்கு உரிய பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும். இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக உடனடியாக பேச்சு நடத்தவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை (12ஆம் பக்கம் பார்க்க)

## கோதுமை மா 75 ரூபா, லக்ஸ்பிறே 252 ரூபா

# ப.நோ.கூ.சங்கங்களுக்கான பொருட்களை வழங்க யாழ்.செயலகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம)

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு மற்றும் பால்மா ஆகியவற்றை யாழ் செயலகம் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிதுள்ளார்.

அத்துடன் கோதுமை மா, லக்ஸ்பிறே ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு;

❑ ப.நோ.கூ.சங்கங்களின் விநியோகத்திற்கு தேவையான அரிசி, கோதுமை மா, சீனி, பருப்பு, பால்மா ஆகியவற்றை விநியோகிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே மேற்குறிப்பிட்ட பொருட்கள் எதனையும் ப.நோ.கூ.சங்கங்கள் தனியார் நிறுவனங்களில் இருந்து கொள்வனவு செய்ய வேண்டாம் என அரசாங்க அதிபர், ப.நோ.கூ.சங்கங்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

❑ மாவின்சில்லறை விற்பனை விலை 80 ரூபாயிலிருந்து 75 ரூபா ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. இக் கோதுமை மா 1850 மெற்றிக்தொன் தற்போது துறைமுகத்தில் இறக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அவற்றுக்கான வழங்கற் கட்டளைகளை மாவட்டச் செயலகத்தில் 24.11.2008 முதல் பெற்று பொது மக்களுக்கு விநியோகிக்குமாறு ப.நோ.கூ.சங்கங்களின் பொது முகாமையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

❑ லக்ஸ்பிறே பால்மாவின் விலை 262 ரூபாயில் இருந்து 252 ரூபாயாக சில்லறை விற்பனை விலை குறைக்கப்பட்டுள்ளது.

❑ லக்ஸ்பிறே, அங்கர் பால்மா பைக்கற்றுக்கள் போதிய அளவு கையிருப்பில் இருப்பதனால் தனியார் வியாபாரிகளும் மாவட் டச் செயலகத்தில் நேரடியாக வழங்கல் கட்டளைகளைப் பெற்று பால்மா வகைகளைக் கொள்வனவு செய்ய முடியும்.

❑ ப.நோ.கூ.சங்கங்களின் விநியோகத்திற்கு தேவையான ஆயிரம் மெற்றிக்தொன் சீனி அத்தியாவசிய சேவை ஆணையாளரால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது. இதற்கான விநியோகம் அடுத்த வாரத்தில் மேற்கொள்ளப்படும். (ச)

பொருட்களின் விற்பனை விலை கீழ்வருமாறு :

| பொருள்கள் | மாவட்ட செயலகத்தின் விலை | ப.நோ.கூ.சங்கத்தின் விற்பனை விலை |
|---|---|---|
| சிவப்பு நாட்டரிசி | ரூபா 87/- | ரூபா 90/- |
| கோதுமை மா | ரூபா 72/- | ரூபா 75/- |
| பருப்பு | ரூபா 138/- | ரூபா 140/- |
| அங்கர் பால்மா | ரூபா 278/- | ரூபா 280/- |
| லக்ஸ்பிறே | ரூபா 250/- | ரூபா 252/- |

# யாழில் ஆசிரிய நியமனம் பெறவுள்ள பட்டதாரிகள் தொடர்பு கொள்ளவும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி ஆசிரியர்களுக்கான நியமனம்- 2008 ஆட்சேர்ப்புத் திட்டத்தில் முதல்கட்டத்தில் தெரிவான யாழ்ப்பாண பட்டதாரிகளுக்கான நியமனம் வழங்கப்படவுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கென யாழ்.மாவட்ட பாடசாலைகளில் நியமனத் தகுதி பெற்று வடமாகாண கல்வி அமைச்சின் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களில்,

தற்போது யாழ்.மாவட்டத்துக்கு வெளியே வசிக்கின்றவர்கள் தமது வதிவிடம் மற்றும் தொலைபேசி போன்ற விபரங்களுடன் சு.கிருஸ ணகுமார், பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி பண்பாட்டலுவலகள், விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம். வரோதயநகர், திருகோணமலை என்ற முகவரியுடன் இன்று தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அல்லது 060 226 5704 என்ற தொலைபேசி எண்ணில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ள முடியும். (ச)

# சமூக அபிவிருத்தி மன்ற ஸ்தாபகர் நினைவு தினம்

சமூக அபிவிருத்தி மன்ற ஸ்தாபகரும் முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆணையாளருமான அமரர் சண்முகம் ஞானப் பிரகாசத்தின் நினைவு தினம் 109, பருத்தித்துறை வீதி, நல்லூர் சமூக அபிவிருத்தி மன்ற காரியாலயத்தில் மன்றத் தலைவர் திருமதி ஜெபமணி ஜோசவ் தலைமையில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் மாவட்ட கூட்டுறவுச்சபை மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வேதவல்லி செல்வரட்ணம், யாழ்.மாவட்ட விவசாய சம்மேளனத் தலைவர் க.முதலியார், சமூக அபிவிருத்தி மன்ற இணைப்பாளர் திருமதி என்.ஜெகதீசன் ஆகியோர் உரையாற்றுவர். தொடர்ந்து பொதுக்கூட்டமும் கழக உறுப்பினர்களுக்கு அமரர் நினைவையொட்டி மரக் கன்றுகள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (ச).



இலங்கை வங்கி மானிப்பாய் மேற் தரக் கிளையில் விசேட சேமிப்புச் சான்றிதழுக்கான அதிர்ஷ்டப்பரிசான ஒலி அமைப்புச் சாதனம் (Room Theater) திரு.திருமதி பிரேம்குமார் ரஞ்சினி ஆகியோருக்கு முகாமையாளர் க.இலட்சுமணசர்மா வழங்குவதையும் அருகில் வங்கி ஊழியர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# 16 வயதைப் பூர்த்தி செய்த 14 ஆயிரம் பேர் தேசிய அடையாள அட்டை பெறவில்லை

யாழ்.மாவட்டத்தில் 16 வயதைப் பூர்த்தியடைந்த சுமார் 14 ஆயிரத்து 4 பேர் இதுவரை தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளவில்லை என அரசஅதிபர்க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டையின் முக்கியத்துவத்தை முன்வைத்து 16 வயது பூர்த்தியடைந்த அனைவரும் தேசிய அடையாள அட்டை கட்டாயம் வைத்திருக்க வேண்டியுள்ளதால் 31.12.2008 இற்கு முன்பு உரித்துடையோர் அனைவருக்கும் தேசிய அடையாள அட்டை வழங்க முயற்சிப்பதாக ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். இதற்கமைவாக யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலர் ரீதியாக இதுவரை தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளாதவர்களின் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கான முக்கிய ஆவண மான பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்திற்கான நடமாடும் சேவை பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்களின் அனுசரணையுடன் சகல பிரதேச செயலகங்களிலும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் உதவிப் பதிவாளர் நாயகத்தினாலும் காணி மேலதிக மாவட்டப் பதிவாளராலும் அப்பிரிவிற்குரிய மேலதிக மாவட்டப் பதிவாளர்களினாலும் நடத்தப்படுகின்றது. எனவே சகல பிரதேச செயலர்களையும் கிராம சேவையாளர்களை ஒத்துழைப்புடன்இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களின் விண்ணப்பப் படிவங்களையும் உடனடியாக சேகரித்து மாவட்டச் செயலகத்திற்கு அனுப்புமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் கேட்டுள்ளார்.

தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளாதவர்களின் பிரதேச ரீதியான விபரம் வருமாறு :

| பிரதேச செயலகம் | மே 2008 கிடைத்த விபரம் | ஒக்ரோபர் 2008 கிடைத்த விபரம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 4,063 | 1,416 |
| நல்லூர் | 1,591 | 622 |
| கோப்பாய் | 5,851 | 2,771 |
| கரவெட்டி | 3,647 | 1,155 |
| பருத்தித்துறை | 1,613 | 300 |
| சண்டிலிப்பாய் | 2,922 | 1,275 |
| சங்கானை | 1,804 | 786 |
| உடுவில் | 5,266 | 2,100 |
| தெல்லிப்பளை | 3,377 | 1,139 |
| வேலணை | 1,101 | 942 |
| சாவகச்சேரி | 2,515 | 381 |
| காரைநகர் | 420 | 196 |
| மருதங்கேணி | 183 | 144 |
| நெடுந்தீவு | 356 | 301 |
| ஊர்காவற்றுறை | 877 | 776 |
| | 35,586 | 14,004 |


யாழ்ப்பாணத் தகவல் களஞ்சியம்

இறுவட்டு வெளியீட்டு விழா

வலி.தென்மேற்கு கலாசாரப் பேரவையினரின்

அழைப்பு மடல்

காலம் : 22.11.2008 சனிக்கிழமை காலை 9.30 மணி

இடம் : கைலாசபதி கலையரங்கு, யாழ்.பல்கலைக்கழகம்

தலைவர் : **திருமதி ரூபினி வரதலிங்கம் அவர்கள்**

(பிரதேச செயலர், சண்டிலிப்பாய்)

பிரதம விருந்தினர் : **திருமிகு க.கணேஷ் அவர்கள்**

(அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)

சிறப்பு விருந்தினர்கள் : **திருமிகு.ஆ.சிவசுவாமி அவர்கள்**

(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்)

**பேராசிரியர் கலாநிதி K.கந்தசாமி அவர்கள்**

(பௌதிகவியல் சிரேஷ்ட பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழம்)

கௌரவ விருந்தினர் : **கலாநிதி திருமதி சிவசாந்தினி குகநாதன்**

(சிரேஷ்ட விரிவுரையாளர், விலங்கியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

வெளியீட்டுரை : **பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராஜா**

(வரலாற்றுத்துறை பேராசிரியர், யாழ்.பல்கலைக்கழகம்)

**இறுவட்டு வெளியீடு :**

முதல் பிரதி வழங்குதல்

சிறப்புப் பிரதிகள் வழங்குதல்

மதிப்பீட்டுரை : **பேராசிரியர் V.P.சிவநாதன் அவர்கள்**

(தலைவர், சட்டத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

ஏற்புரை : **சி.சுதர்சன்**

(விஞ்ஞான தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்

நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**வலி.தென்மேற்கு கலாசாரப் பேரவை**

**சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்** (இ-106)


# யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் தமிழ்த்தின விழா நாளை

யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் தமிழ்த்தின விழா நாளை காலை 9.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறும். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு, யாழ்.வலயக் கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள் நேசனும், கௌரவிருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரம்,யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராசா ஆகியோர் கலந்துகொள்வர். விழாவின் தொடக்கவுரையை பாடசாலை அதிபர் திருமதி த.அ. துரைசிங்கம் நிகழ்த்துவார். பரிசில்களை திருமதி சரஸ்வதி சிவலிங்கராஜா வழங்குவார். விழாவில் மாணவிகளின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (ந)

## அவசரமாய் தரையிறங்கிய இலங்கை விமானம்

கொழும்புக்குப் புறப்பட்ட ஸ்ரீ லங்கா ஏர்லைன்ஸ் விமானத்தின் முன் சக்கரத்தில் பிரச்சினை ஏற்பட்டதால் அந்த விமானம் மீண்டும் கொச்சி விமான நிலையத்தில் அவசரமாகத் தரையிறங்கியது. கொச்சி நெடும்பசேரி விமான நிலையத்திலிருந்து நேற்றுக் காலை யு எல்' 165 என்ற அந்த விமானம் 97 பயணிகளுடன் புறப்பட்டது. ஆனால் அதன் முன் சக்கரம் முழுவதும் உள்ளே செல்லவில்லை பாதியில் நின்றது.

இதையடுத்து விமானத்தை மீண்டும் கொச்சிக்கே திருப்பினார் விமானி. சரியாக இயங்காத முன் சக்கரத்துடன் அந்த விமானம் தரையிறங்க இருந்ததால் விமான நிலையம் முழு அவசர கால நிலைக்குக் கொண்டு வரப்பட்டன.

# இன்று ஒரு தகவல்

## எடுப்பதும் கொடுப்பதும்

லோகமான்ய பாலகங்காதர திலகர் என்று ஒருவர் இருந்தார். அவர் மனைவியின் பெயர் 'தபிபாய்' பெரிய குடும்பத்துப் பெண். அந்தக்காலத்தில் திருடர்கள் பயம் அதிகம்.

இந்தக்காலத்து திருடனுக்கும் அந்தக்காலத்து திருடனுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் உண்டு.

இந்தக்காலத்திருடன் நியாயம், அநியாயம் பார்ப்பதில்லை. எதுவாக இருந்தாலும் அடித்துக்கொண்டு போய் விடுவான்.

அந்தக்காலத்து திருடனிடம் ஒரு தார்மீக உணர்வு இருந்ததாம்.

அதாவது, அவர்கள் எதைக் களவாடினாலும் சரி அரிசியை மட்டும் களவாடுவது இல்லையாம்.

அப்படி ஒரு கொள்கை!

அதனால் அந்தக் காலப் பெண்கள் நகைநட்டுக்களை பத்திரமாக வைப்பதென்றால் பெட்டியில் வைக்கமாட்டார்கள். அரிசிப் பானையில் போட்டு வைத்து விடுவார்கள்.

இப்பொழுது பாங்க் சேவ்டி லொக்கர் இருப்பது மாதிரி அந்தக்காலத்தில் சேவ்டி லொக்கர் – அரிசிப் பானை!

வளையல், மூக்குத்தி, தோடு எதுவாக இருந்தாலும் அதில் போட்டு பத்திரமாக வைத்து விடுவார்கள்.

திலகரின் மனைவி தபிபாயும் தன்னுடைய ஆபரணங்களை ஒரு அரிசிப் பானைக்குள் போட்டு மூடி வைத்திருந்தார்.

ஒருநாள் ஒரு பிச்சைக்காரி பிச்சை கேட்டு வந்திருந்தார். திலகர் வீட்டுக்கு வந்து "தர்மம் போடுங்க தாயே!" என்றார். இது தபிபாயின் காதில் விழுந்தது. உடனே கைநிறைய அரிசியை அள்ளிக்கொண்டு வந்து போட்டார். பாத்திரத்தில் அரிசியை போட்டதும் அதில் ஏதோவொன்று "பளிச்" சென்று மின்னியது. அதாவது அவரின் வைர மூக்குத்தி ஒன்று அரிசியுடன் சேர்ந்து அந்தப் பிச்சைக்காரியின் பாத்திரத்துக்குப் போய்விட்டது. தபிபாயிற்கு ஒரே குழப்பமாகி விட்டது.

பிச்சைப் பாத்திரத்துக்குள் இருந்து மூக்குத்தியை எப்படி வெளியே எடுப்பது? வாய்திறந்து கேட்பதற்கும் கூச்சமாக இருந்தது.

திலகர் இவற்றையெல்லாம் திண்ணையில் உட்கார்ந்து கவனித்துக்கொண்டிருந்தார்.

மனைவியின் மனதுக்குள் நடக்கும் மௌனப் போராட்டத்தை நன்றாக புரிந்து கொண்டார்.

அவர் மனைவியைப்பார்த்து "தபிபாய், இது தெய்வ சம்மதம். அவளுக்கு சேரவேண்டிய மூக்குத்தி அவளிடமே போய்விட்டது. விழுந்த மூக்குத்தியை எடுக்க வேண்டாம்" என்று சொல்லி விட்டார்.

"சரி" என்று சொல்லிவிட்டு மேற்கொண்டு எதையும் கூறாமல் அந்த அம்மா வீட்டிற்குள் சென்று விட்டாராம்.

இந்தக்காலத்தில் இப்படியெல்லாம் நடக்குமா?

வெறும் அரிசியை போட்டு விட்டு விவகாரம் பண்ணிக் கொண்டிருக்க மாட்டோமா?

ஒரு பெரிய மனுஷன் வீட்டுக்கு பிச்சைக்காரன் வந்தான்.

"ஐயா... பிச்சைக்காரர்களெல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் வைத்திருக்கிறோம். அதற்கு நிதி சேர்க்கிறோம் அதற்கு ஒரு நூறு ரூபா கொடுத்தீங்க என்றால் எங்களுக்கு பெரிய உதவியாக இருக்கும்!" என்றான்.

"அதெல்லாம் ஒன்றும் கொடுக்கமுடியாது போ!" என்றார் அவர்.

"அப்படியானால் 50 ரூபாவாவது கொடுங்க" என்றான் இவன்.

"அதுவும் கொடுக்கமுடியாது" என்று சொல்லிவிட்டார் அவர்.

"25 ரூபா" – அதுவும் முடியாது.

"சரி இவ்வளவு பெரிய வீட்டுக்கு வந்து வெறுங்கையுடன் திரும்பினால் நன்றாக இருக்காது அதனால் சும்மா ஒரு ரூபா மட்டுமாவது கொடுங்க!" என்றான் அவன்.

"ஒரு பைசா கூட என்னிடம் கிடையாது!" என்றார் அவர்.

"அப்படியானால் ஒன்று செய்யுங்க... எங்கள் சங்கத்தில் நீங்களும் ஒரு மெம்பர் ஆகி விடுங்க" என்றானாம் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கொலை, கடத்தல்களுக்கு அஞ்சியே தமிழர்கள் வெளியேறுகின்றனர்

## தங்கேஸ்வரி எம். பி

(கொழும்பு)

உள்ளூரில் வேலை வாய்ப்பு குறைந்துள்ள நிலையிலேயே வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்பு தேடிச் செல்வோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்ற போதிலும் பயங்கரவாதம் கொலை, கடத்தல் நடவடிக்கைகளுக்கு அஞ்சியே தமிழர்கள் வெளிநாடுகளுக்கு செல்கின்றனர் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான தங்கேஸ்வரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வரவு – செலவுத் திட்டத்தில் வெளிநாட்டு அலுவலர்கள் வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சுகள் மீதான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

வெளிநாட்டில் வேலை வாய்ப்புகளை தேடிச் செல்வோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து சென்றாலும் யுத்தம், கடத்தல், கொலை, பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு அஞ்சியே தமிழர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று கொண்டிருக்கின்றனர்.

தொழிற்றுறைகளை பொறுத்தமட்டில் பரந்தன் இராசயன ஆலை, வாழைச்சேனை கடதாசி ஆலை மூடப்பட்டதனால் ஆயிரக்கணக்கானோர் வேலையிழந்துள்ளனர். 2008 ஆம் ஆண்டு புள்ளி விபரங்களின் பிரகாரம் கிழக்கு மாகாணம் தவிர 4 இலட்சத்து 37 ஆயிரம் பேர் வேலையற்றவர்களாக இருக்கின்றனர்.

கிழக்கு மாகாணம் மீட்கப்பட்டதாக கூறப்படுகின்ற போதிலும் அங்கு நாளாந்தம் கொலை, கடத்தல்கள் இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றன.

வயலுக்கு செல்கின்ற விவசாயிகள் கடத்தி கொலை செய்யப்பட்டதினால் மக்கள் மட்டு மல்ல விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. செயலாளரின் வேண்டுகோளையும் ஏற்காது தொண்டு நிறுவனங்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டமையினால் இலட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொழிற்றுறைகளில் அதுவும் அரசாங்க தொழிற்றுறையில் தமிழர்கள் தெரிவு செய்யப்படுவதிலும் புறக்கணிப்புகளே முன்னெடுக்கப்படுகின்றன.

அபிவிருத்தி வேலைவாய்ப்புகளை கவனத்தில் கொண்டால் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சுலபமாகும். அதேபோல கொரியா உள்ளிட்ட நாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கும் போதும் பல்வேறு முரண்பாடுகள் நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஓ–6)

# பாடசாலை அதிபர்களுக்கான இருநாள் உளசமூக விழிப்புணர்வுச் செயலமர்வு

(அல்வாய்)

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான இரண்டு நாட் கள் செயலமர்வு இன்றும் நாளை யும் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவ லகத்தில் காலை 8.30 மணிமுதல் பி. ப. 3.30 மணிவரை நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் சுகாதாரத் திணைக்கள வைத்தியர்களும், வளவாளர்களும், இத்துறைசார் நிபுணர்களும் கலந்து கொண்டு பாடசாலைகளில் உளசமூக சேவையும் அதன் தேவையும், மாணவர் எதிர்கொள்ளும் உளவியல் ரீதியான பிரச்சினைகளும் அவற்றில் செல்வாக்கு செலுத்தும் காரணிகளும், மாற்று முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவம் ஆகிய விடயங்கள் பற்றிய கருத்துக்களை வழங்கவுள்ளனர் என வலிகாமம், வடமாகாண உளசமூக வள நிலையம், உளவள நிலையப் பொறுப்பாளர் உதயகலா சிவபாத சுந்தரம் அறிவித்துள்ளார்.

(ஓ–19)

# இராசி பலன்

*21.11.2008*
*(கார்த்திகை 6, வெள்ளிக்கிழமை)*
*நவமி முன்னிரவு 7.04மணிவரை*
*பூரம் பின்னிரவு 12.58மணிவரை*
*இராகுகாலம் 10.40–12.10மணிவரை*
*சுபநேரம் 6.10–7.40 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | தேக ஆரோக்கியம், எடுத்த காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, புதிய திருப்பம். |
| இடபம் | முயற்சி தாமதம், குடும்பக் கவலை, வேலைச்சுமை, ஆரோக்கிய குறைவு |
| மிதுனம் | உடல் சோர்வு, தொழில் ஆர்வம், வாகன சுகம், உறவினர் சந்திப்பு |
| கடகம் | பிரயாண நன்மை, நினைத்த காரியம் கைகூடும், தனலாபம், வாக்குமேன்மை |
| சிங்கம் | கற்பனை மிகுதி, விவாதம், காரிய தாமதம், அதிக செலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, விருந்து பசாரம், நல்ல முயற்சி, போசன சுகம். |
| துலாம் | உறவினர் மனஸ்தாபம், எதிர்பாராத நன்மை, சயன சுகக் குறைவு, சுப செலவு. |
| விருச்சிகம் | எடுத்த காரியம் கைகூடும், உறவினர் உதவி, போசன சுகம் பண வருவாய். |
| தனுசு | புதிய விடயம், தொழில் மேன்மை, நண்பர்கள் உதவி, காரிய அனுகூலம். |
| மகரம் | அதிக பிரயாசை, எதிர்பாராத செலவு, பிரயாணம், முயற்சி தாமதம். |
| கும்பம் | புனல் வியாதி, வீண்பிரச்சினை, வாகன பயணம், வேலைச்சுமை. |
| மீனம் | திடீர் பயணம், செல்வாக்கு, பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி. |

வளவன்

# கல்விமாணிப் பட்ட நெறி முதலாம் வருட பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப்பட்டு வரும் கல்விமாணிப் பட்டநெறி முதலாம் வருட மாணவர்களுக்கான பரீட்சைகள் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி பரீட்சை நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் அவர்களது சொந்த முகவரிக்கு தேசிய கல்வி நிறுவகத்தால் அனுப்பப்பட்டுள்ளதாகவும் இதுவரை அனுமதி அட்டை கிடைக்காதவர்களும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப் பட்டநெறி இணைப்பாளர் இ. சத்தியேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதுவரை பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் 021 222 3584 அல்லது 077 9143187 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் விபரங்களை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஓ)

# குறிப்பிட்ட வகுப்புகளுக்கு மட்டுமே வினாத்தாள்கள் தயாரிக்க தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலைகளுக்கான தவணைப் பரீட்சை வினாத் தாள்களை தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட கல்வி அமைச்சு அதனை ஒரு சில வகுப்புகளுக்கு மட்டுப் படுத்தியுள்ளது.

குறிப்பிட்ட சில பாடங்களுக்கான வினாத்தாள்களே தயாரிக்கப்படவுள்ளன.

ஏனையவற்றை யார் மேற்கொள் வார்கள் என்று இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் கருத்து தெரிவிக்கையில்,

மாகாண சபைகள், பாடசாலை மட்டத்திலேயே தவணைப் பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டன. இதில் முறைகேடுகள் இடம்பெற்றதோடு வினாத்தாள்களுக்கு கட்டணமும் அறவிடப்பட்டது. இது கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதோடு வினாத்தாள்களை அச்சிடும் பணியை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் ஒப்புக் கொண்டது.

ஆனால், தற்போது 6ஆம் 7ஆம் 10ஆம் 11ஆம் வகுப்புகளுக்கான தமிழ்/சிங்களம், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், சமயம், வரலாறு போன்ற பாடங்களுக்காக மட்டுமே வினாத்தாள்கள் தயாரித்து விநியோகிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நாடு முழுவதும் வினாத்தாள்களை விநியோகிப்பதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்ட கல்வியமைச்சு தற்போது கையை விரித்துள்ளது. இதனால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர் என்றார்.

(ஓ–6)

## கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் பயிற்சி வகுப்பு

வடமாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் புதிய மத்தியஸ்தர் தெரிவுக்கான பயிற்சி வகுப்புகளை நடாத்தவுள்ளது. எனவே கரப்பந்தாட்ட மத்தியஸ்தர்களாக இணைய விரும்புவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் இல.47 அராலிவீதி, சங்கானை எனும் முகவரியிலுள்ள வடமாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க செயலாளருடன் தொடர்புகொள்ளுமாறு செயலாளர் ந.சுதேஸ்குமார் அறிவித்துள்ளார். (ஓ-6)

## யோகாசன தியானப் பயிற்சி

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதி நடத்தும் புதிய யோகாசன தியான வகுப்புகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30மணி தொடக்கம் 8 மணிவரை மானிப்பாய் வீதி, தாவடியிலுள்ள சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் வகுப்புகள் ஒவ் வொரு சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறவுள்ளதாகவும் ஆண், பெண், சிறுவர்கள் என சகலரும் கலந்துகொள்ளலாம் எனவும் சமிதி செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-4)

## வடமராட்சி வலய வெளிவாரி மதிப்பீட்டு போட்டியில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் நெல்லியடியில் நடைபெற்ற கல்வித்தின விழாவில் வடமராட்சி வலயத்தின் வெளி வாரி மதிப்பீட்டின் படி வகை II பாடசாலைகளுக்குள் கரணவாய் மகாவித்தியாலயம் முதலாம் இடம்பெற்றமைக்கு அதிபர் சி.நற்குணலிங்கத்திற்கு பிரதம விருந்தினரான யாழ். பிரதேச செயலர் க.கணேஷ் வெற்றிக்கேடயம் வழங்கி கௌரவித்தார். (ஓ-6)

## தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் முற்பகல் 11.30க்கு நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

இதேவேளை பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் காலை 9.30மணிக்கும் சுற்றாடல் சுகாதாரக் குழுக் கூட்டம் 10.30 மணிக்கும் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6,29)

## கிராம அலுவலர் மீள் நியமனம்

(பருத்தித்துறை)

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள இளைப்பாறிய இரு கிராம உத்தியோகத்தர்களுக்கு மீள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மீள் நியமனத்தைப் பெற்றுள்ள ஆர். சோமசுந்தரம் அல்வாய் தெற்கு கிராம உத்தியோகத்தராகவும் கே.மகேந்திரராஜா கட்டைவேலி கிராம உத்தியோகத்தராகவும் கடமையேற்றுள்ளார். (ஓ-52)

# தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் சிறந்த விவசாயிகளை கௌரவிக்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தொல்புரம் கமநல சேவைகள் நிலைய மாநாட்டு மண்டபத்தில் தொல்புரம் விவசாயப் போதனாசிரியர் செல்வி. தி. கலைவதனா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலாளர் திருமதி. பாபு தேவநந்தினி, சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர். சி. சிவகுமார், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் த. ஜெயசீலன், கௌரவ விருந்தினர்களாக தொல்புரம் கமநல சேவைகள் நிலைய பெரும்போக உத்தியோகத்தர் திருமதி. சா. குகநேசன், வட்டுக்கோட்டை கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் ந. விவேகானந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ் விழாவில் விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்பத் தகவல்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளதுடன் றுவான் இன சோள விதையும், திஸ்ஸ இன நிலக்கடலை விதையும், ரவி. இன குரக்கன் விதையும், தொழில்நுட்ப தகவல் அடங்கிய துண்டுப்பிரசுரங்களும் விற்பனை செய்யப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்று கௌரவிக்கப்படவுள்ள விவசாயிகளின் பெயர் வருமாறு.

*சிறந்த நெல் உற்பத்தியாளர்*

சி. இராஜசிங்கம் (தொல்புரம் மத்தி), இ. வெள்ளியம்பலம் (சங்கரத்தை), செ. சந்திரசேகரம் (சங்கானை)

*சிறந்த சேதனப் பண்ணையாளர்*

ந.மயூரன் (அராலி மேற்கு), சு. சரோஜினி தேவி (அராலி தெற்கு), வ. வீரசிங்கம் (தொட்டிலடி)

*சிறந்த சுயவிதைநெல் உற்பத்தியாளர்*

செ.கந்தசாமி (சங்கானை), கா.நடராஜா (அராலி தெற்கு), ந.சிவனேஸ்வரன் (அராலி மேற்கு).

*சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்*

ந.செந்தில்நாதன் (அராலி மேற்கு), பொ. போசராசன் (மூளாய் தெற்கு), அ. தில்லையம்பலம் (அராலி தெற்கு)

*சிறந்த பெண்தலைமைத்துவ விவசாயி*

க.தவராணி (சுழிபுரம்), நா.பரிமளகாந்தி (தொல்புரம்), ப.நவநீதராணி (காரைநகர்)

*சிறந்த சோளச் செய்கையாளர்*

த.விசாகரன் (சுழிபுரம் கிழக்கு), சி.கணேசமூர்த்தி (மூளாய்), சு.புண்ணியமணியம் (காரைநகர்)

*சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்*

இ.பரிமணந்ததேவி (தொல்புரம்), நா.திருநாவுக்கரசு (மூளாய் தெற்கு), க. ரவீந்திரன் (சங்கரத்தை)

*சிறந்த குரக்கன் செய்கையாளர்*

க.கனகரத்தினம் (சுழிபுரம்), செ. உருத்திரன் (சுழிபுரம்), க.வடிவேலு (மூளாய் தெற்கு) (6-2)

## தென்மராட்சி வலயப் பாடசாலைகளுக்கான கவிதை, கட்டுரைப் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றத்தினால் தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட "புகைத்தல், போதை வஸ்து பாவனையை நீக்கி நல்லொழுக்கத்தைப் பேணல்" எனும் விழிப்புணர்வு தொடர்பான கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு,

கட்டுரை

*கீழ்ப்பிரிவு* -கு.நிகேதன்-மீசாலை வீரசிங்கம் மகா வித்தி., இ.சிந்துஜா-மீசாலை வீரசிங்கம் மகா வித்தி., ஸ்ரீ .தனுஜா -உசன் இராமநாதன் வித்தி.

*மத்தியபிரிவு*-சி.லக்ஷியா-மீசாலை வீரசிங்கம் மகா வித்தி., த.நிதர்சனா-சாவ. இந்துக்கல்லூரி, கு.டயானி- கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி.

*மேற்பிரிவு*-யோ.கஜேந்தினி- மீசாலை வீரசிங்கம் மகா.வித்தி., அ.தர்மாலினி-சாவ.மகளிர் கல்லூரி, கோ.மேனகா- சாவ. இந்துக் கல்லூரி.

கவிதை

*கீழ்ப்பிரிவு*-த.அருட்பிரியா-சாவ.மகளிர் கல்லூரி, த.துஷ்யந்தி- கச்சாய் அ.த.க. பாடசாலை, து.குமுதா- கச்சாய் அ.த.க. பாடசாலை.

*மத்திய பிரிவு*- ம.அன்பரசி-மட்டுவில் சந்ரமௌலீச வித்தி., இ.கோகுலப்பிரியா-இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி., ந. நிரோசனா -கச்சாய் அ.த.க. பாடசாலை.

*மேற்பிரிவு* -கு.தர்மேந்திரன்-கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தி., கு.நித்தியா-சாவ.மகளிர் கல்லூரி, ஜெ. சர்மிளா-சாவ. மகளிர் கல்லூரி. (ஓ-6-29)

## முதியோர் அடையாள அட்டை

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் முதியோர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (ஓ-29)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நியமனம் பெறவுள்ள பட்டதாரிகளின் நியமனக் கடிதம் பெற்றுக் கொள்ள செல்வது தொடர்பாக அவசரமானதும் அவசியமானதுமான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை வலயத்திற்கு முன்பாக காலை 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வருகை தராத வர்களது விபரங்கள் கொண்டுசெல்லப்பட மாட்டாது. எனவே தவறாது அனைவரும் வருகை தருமாறு வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கேட்டுக் கொள்கின்றது. (ஓ)

## உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரியின் உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களின் பட்டநிறைவு விழா தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடை பெறும் எனவும் அனைத்து உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறும் கல்லூரியின் பீடாதிபதி எஸ். கே. யோகநாதன் அறிவித்துள்ளார். (ஓ)

## வண்ணத்து பூச்சிகளின் கோலம் கலை நிகழ்ச்சி நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ். சுனேரா மன்றம் திருமறைக் கலாமன்றத்துடன் இணைந்து மாற்று ஆற்றல் உடைய பிள்ளைகளின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் முகமாக ஏற்பாடு செய்துள்ள 'வண்ணத்துப்பூச்சிகளின்கோலம்' என்னும் கலை நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு யாழ். மறைக் கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் இணைப்பாளர் கலாபூஷணம் ஜி.பி. பேர்மினல் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்கு யாழ் போதனா வைத்தியசாலை மருத்துவர் இ.சிவசங்கர் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக 'வாழ்வகம்' அமைப்பின் தலைவர் ஆ.ரவிந்திரன், உடுவில் ஆர்க் அமைப்பின் தலைவி அருட்சகோதரி டானியலா ஆகியோரும், கௌரவ விருந்தினராக இலங்கைத் திருச்சபையின் யாழ். குருமுதல்வர் அருட்திரு. எஸ்.பி. நேசகுமார் அடிகளாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள்.

கலை நிகழ்வுகளாக மாற்றும் ஆற்றல் உடைய பிள்ளைகளின் நடனங்கள், பாடல்கள், நாடகங்கள் என்பன இடம்பெறவுள்ளன. (ஓ)



## யாழ்.செய்திகள்

## கரப்பந்தாட்ட பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சமாசத்தினால் தெல்லிப்பளை மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவர்களுக்கான கரப்பந்தாட்ட பயிற்சி முகாம் கடந்த 11 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 3மணிவரை வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப் பயிற்சியில் 150 க்கும் மேற்பட்ட வீரவீராங்கனைகள் கலந்துகொண்டதுடன் இப் பயிற்சியை யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி கே.ஏகாம்பரம், யாழ்.மாவட்ட சமாசச் செயலாளார் கே.மனோகரன், கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க செயலாளர் என்.சுரேஸ்குமார் ஆகியோர் நடாத்தினார்கள்.

இவ்வித கரப்பந்தாட்ட பயிற்சிகளை பெற விரும்பும் வித்தியாலய, கல்லூரி அதிபர்கள், கப்ரின் டி.ஏ.எம். குணசிங்கம் ஜே.பி, யாழ். கரப்பந்தாட்ட சமாச பணிமனை, இல.61 ஈச்சமோட்டை யாழ்ப்பாணம் (தொ.போ. இல.222 2474) என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-4-10)



கோப்பாய் குடும்பப் பாடசாலைகள் இணைந்து நடாத்திய "தரமான கல்வித்தினம்" நிகழ்வுகளில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.வலயக் கல்விப பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம்,கோப்பாய் கல்விக் கோட்டப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல் ஆகியோர் உரையாற்றுவதையும், வெற்றியீட்டிய மாணவன் ஒருவருக்கு திருமதி பரமேஸ்வரி கணேஷ் பரிசில் வழங்குவதையும், கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.



# தரிசனம்


Muslim Information Centre

வலம்புரி

# யாழ். குடாநாட்டு கடற்றொழிலாளர்களின் அவல நிலை என்று மாறுமோ?

வடபுலத்தில் நீண்டு செல்லும் யுத்தத்தினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள் கடற்றொழிலாளர்கள் என்ற உண்மை மறுப்பதற்குரியதல்ல.

யுத்தத்தினால் தொழில் இழப்புகள் மட்டுமன்றி உயிரிழப்புகளும் தாராளமாக ஏற்பட்டன. கடற்றொழிலாளர்களின் வாழ்விடங்கள் கடலோரங்களை அண்மித்திருந்தமையால் கடல், தரை, வான் வழித்தாக்குதல்களில் இவர்களின் வாழ்வு பிசங்கிப்போக,



இயற்கையும் இவர்களைபழிதீர்த்துக்கொண்டது.

கடின உழைப்பினால் கடல் வளத்தை திரட்டி இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு பெருந்துணை புரிந்த யாழ். குடாநாட்டுக் கடற்றொழிலாளர்கள் இன்று தொழில் இழந்து துன்புறுகின்றனர்.

இந்தத் துயரச் செய்தியினை தென்பகுதி மக்கள் அறிந்திருப்பார்களோ என்ற ஐயத்



தின் மத்தியில் உண்மையை உரைப்பதற்காக குடாநாட்டின் கடற்றொழிலாளர்களைச் சந்தித்தோம்.

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத்தலைவர் தவரட்ணம் அவர்களைச் சந்தித்தபோது குடாநாட்டு கடற்றொழிலாளர்களின் அவல நிலைகளை விலாவாரியாக முன்வைத்தார்.

1983ஆம் ஆண்டில் 48 ஆயிரத்து 775 மெற்றிக்தொன் கடல் உணவை யாழ் மாவட்ட கடற்றொழிலாளர்கள் பெற்றுத்தந்தனர். இது இலங்கையின் மொத்தக் கடல் உணவில் மூன்றில் ஒரு பங்காக இருந்தது. இத்தகைய காத்திரமான பங்களிப்பை ஆற்றிவந்த யாழ். குடாநாட்டு கடற்றொழிலாளர்கள் இன்று கடலில் இறங்குவதற்குக் கூட படைத்தரப்பின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தற்போது காலை 6 மணிக்கு பின்னர் கடற்றொழில் செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது. மாலை 4 மணிக்குப்பின் கடலில் எவரும் தொழில் செய்யமுடியாது. கடற்றொழில் அனுமதி என்றவுடன் ஆழ்கடல் மீன்பிடி என்றெல்லாம் நினைத்துவிடக்கூடாது. இரண்டு கிலோ மீற்றர் தூரம் மட்டுமே கடற் றொழிலுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு கிலோ மீற்றர் கடல் எல்லைக்குள் தான் யாழ். குடாநாட்டு கடற்றொழிலாளர்களின் ஜீவனோபாயம் தங்கியுள்ளது. யாழ்ப்பாணத்தில் உயர்பாதுகாப்புவலயம் (High Security zone) என்பது தனித்து தரைப்பகுதிக்கு மட்டும் உரிய நியதியல்ல. கடல் பகுதியிலும் உயர் பாதுகாப்பு வலயம் உண்டு.

யாழ் குடாநாட்டில் உள்ள சகல கடற்பரப்பிலும் கரையோரத்தில் இருந்து 500மீற்றர் வரையான கடல்எல்லை உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனைவிட தொண்டைமானாறு, கீரிமலை, வளலாய், காங்கேசன்துறை, மயிலிட்டி, சேந்தான்குளம், மாரிசன் கூடல், மாதகல் ஆகிய கடற்பரப்புகள் கடற்றொழிலுக்கு முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது என கூறும் சம்மேளனத்தலைவர் தவரட்ணம்,

இதன் காரணமாக படைத்தரப்பின் அனுமதியின்றி எவரும் கடலில் இறங்க முடியாது என்கிறார். கடற்றொழிலுக்கு அனுமதிக்கப்பட்ட இரண்டு கிலோமீற்றர் கடல் தூரம் என்பது உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட 500 மீற்றர் கடல் தூரத்திற்கு அப்பாற்பட்ட பகுதியாகும்.

கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் கடலில் இறங்குவதற்காக யாழ். மாவட்டத்தில் 51 கடல் நுழைவாயில்கள் (துறைகள்) உள்ளன.

எந்த நுழைவாயிலினால் கடற்றொழிலுக்கு செல்கின்றார்களோ அவர்கள் அதனூடாகவே தரைக்கு வந்தாக வேண்டும்.

### கட்டுமரப்பாவனை

கடற்றொழிலுக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளில் கட்டுமரம் அல்லது நாட்டுப்படகில் மட்டுமே தொழில் செய்ய முடியும் என்பது முக்கியமானதாகும்.

இயந்திரப்படகுகள் மற்றும் பிளாஸ் ரிக்படகுகள் பயன்படுத்தப்படுவது முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளது. நவீன தொழில்நுட்பம் உச்சம் அடைந்துள்ள போதிலும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள் மட்டும் கட்டுமரத்தில் தடியினால் வலித்து தொழில்செய்யும் பரிதாப நிலையில் உள்ளனர்.

கிழமையில் ஒருநாள் இரண்டு கிலோ மீற்றர் எல்லையைக்கடந்து சென்று தொழில் செய்வதற்கும் இச்சந்தர்ப்பத்தில் படகுப்பாவனை பயன்படுத்துவதற்கும் அனுமதிக்கப்படுகின்றது. எதுவாயினும் இவை குறித்த பிரதேசங்களில் பொறுப்பாக இருக்கின்ற படை அதிகாரிகளின் மனநிலையை அவர்களின் புரிந்துணர்வை பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றன.



### அழிந்துபோன கடற்றொழில் உபகரணங்கள்.

யாழ் மாவட்டத்தில் 1985இல் மூன்றரை தொன் எடையுடைய 548 உள்ளக இயந்திர இணைப்புப்படகுகளும். 17 அடி நீளமான வெளியக இயந்திர இணைப்பைக் கொண்ட 4 ஆயிரத்து 500ற்கும் மேற்பட்ட படகுகளும், சுமார் 4 ஆயிரம் கட்டுமரங்களும் பாவனையில் இருந்தன.

ஆனால் யுத்தத்தின் கொடூரம் இவற்றையெல்லாம் அழித்துவிட்டன. குண்டடிபட்டு பழுதடைந்தவை. பயன்படுத்தாது சேத மடைந்தவை, காணாமல் போனவை. பறிமுதல் செய்யப்பட்டவை என்ற பல்வகைக்காரணங்களால்படகுகள் அழிந்துபோக, தற்போது மூன்றரை தொன் எடை கொண்ட 124 உள்ளக இயந்திரபடகுகளும், 17 அடி நீளம் கொண்ட 2 ஆயிரத்து 758 வெளியக இயந்திரப்படகுகளுமே யாழ் குடாநாட்டில் எஞ்சியுள்ளன. இவை பழையவை அல்ல. அழிந்து போனதன் பின்னர் புதிதாக கொள்வனவு செய்யப்பட்டவை.

### மீனவக்குடும்பங்கள்

யாழ் மாவட்டத்தின் பருத்தித்துறை கிழக்கு - மேற்கு 2ஆயிரத்து985 குடும்பம், காங்கேசன்துறை கிழக்கு - மேற்கு ஆயிரத்து 483, சண்டிலிப்பாய் (பிரதேச செயலகப் பிரிவு) ஆயிரத்து740, சுழிபுரம்-2ஆயிரத்து 637, ஊர்காவற்றுறை- ஆயிரத்து 25, நெடுந்தீவு -414, வேலணை -ஆயிரத்து 108, யாழ். கிழக்கு - மேற்கு 3ஆயிரத்து545, சாவ கச்சேரி- 506 குடும்பங்களாக யாழ். மாவட்டத் தில் மொத்தம் 17 ஆயிரத்து 751 மீனவ குடும்பங்கள் தற்போது உள்ளன.

யாழ். மாவட்டத்திற்கு மட்டும் நாளாந்தம் 4 ஆயிரம் கிலோகிராம் கடல் உணவு தேவை. எனினும் தற்போதைய கடல் வலய தடையினால் நாளாந்தம் 2 ஆயிரம் கிலோகிராம் கடல் உணவைப்பெற்றுக் கொள்வது கூட முடியாத காரியமாகவுள்ளது எனக் குறிப்பிடும் யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனத்தலைவர் தவரட்ணம் 2008 யூலை மாதத்தில் 200 மெற்றிக் தொன் கடல் உணவை மட்டுமே எமது கடற்றொழிலாளர்களால் பெற்றுக்கொள்ள முடிந்தது என்னும் புள்ளி விபரத்தையும் முன்வைக்கிறார்.

### யூலியன் சகாயராஜா (குருநகர்)

2002ஆம் ஆண்டு யுத்தம் நிறுத்தம் செய்யப்பட்டதன் பின்னர் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடித்தோம். இந்த சுதந்திரம் 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்துவிட்டது. இப்போது கடற்றொழில் சங்கம் எம்மை பதிவு செய்து தந்துள்ள கடற்றொழில் அனுமதிப் பத்திரங்களை படையினரிடம் ஒப்படைத்து அவர்கள் தரும் பாசைப் பெற்றுக் கொண்டே கடலுக்குச் செல்ல வேண்டும். இதுவும் கடல் கள நிலை சீராக இருந்தால் மட்டுமே சாத்தியமாகும். கடலில் மோதல் இடம் பெற்றால் அல்லது மர்மக்கப் பல்கள் காணப்பட்டால் கடற்றொழில் செய்வதற்கான அனுமதி கிடையாமல் போகும்.



தற்போது ஆழ்கடல் தொழிலாளர்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இயந்திரப் படகுகள் வருடக் கணக்காக கவிழ்க்கப்பட்டுள்ளன. பாவனையின்மையால் அவை சேதமாகிப் போகின்றன. ஒரு படகை கொள்வனவு செய்வ தாயின் குறைந்தது 5 இலட்சம் ரூபா தேவை. என்ன செய்வது யாழ். மீனவர்களின் கோடிக் கணக்கான ரூபாய் முதலீடுகள் அழிந்து கொண்டிருக்கின்றன. ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டு செல்வந்தர்களாக இருந்த பலர் தற்போது தொழிலின்றி - சேமிப்பு எல்லாம் தீர்ந்து போய் தெருவோர வியாபாரத்தில் ஈடு படும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

### ஆ. ஆசைதாசன் (பாசையூர்).

2002ஆம் ஆண்டில் செய்யப்பட்ட சமாதான உடன்படிக்கையை நம்பி வங்கிகளில் கடன்பெற்றும், நகைகளை அடகுவைத்தும் இயந்திரப் படகுகளை கொள்வனவு செய்தோம். 2006ஆம் ஆண்டில்யாழ். மாவட் டத்தில் அமுல் படுத்தப்பட்ட ஆழ் கடல் மீன்பிடி தடையும், கடற்றொழிலுக்கான நேர வரையறையும் எமது குடும்பங்களை வறுமைக்குத் தள்ளி விட்டது.



கடற்றொழிலுக்கு தடையிருக்கும் அதே நேரம் வங்கியில் பெற்ற கடனுக்காக வட்டி செலுத்திக் கொண்டிருக்கின்றோம்.

(06ஆம் பக்கம் பார்க்க)

தரிசனம் வலம்புரி

# இலங்கையின் தொன்மை இனமாக தமிழர் இருந்ததற்கு சான்றுகள் உண்டு

ஈழத்தைப்பொறுத்தமட்டில் கற்கால மனிதனின் நடமாட்டம் இற்றைக்குச் சுமார் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்டதாகக் காணப்படுகின்றது.

ஈழத்தில் ஏற்பட்ட ஆதிக்குடியேற்றம் பற்றிய ஐதீகங்கள் பௌத்தமத நூல்களாகிய தீபவம்சம், மகாவம்சம் ஆகியவற்றில் உள்ளன.

கி.மு. 3ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் (கி.மு.250) பௌத்தமதம் இங்கு புகுந்தபோது இதனைத் தழுவிய மக்கள், நாடு ஆகியவைபற்றி பல்வகையான ஐதீகங்கள் இம்மதத்தினரால் உருவாக்கி வளர்க்கப்பட்டன இவற்றில் ஒன்றுதான் ஆதிக்குடிகள் அமானுஷ்யர்கள் என்பதாகும்.

எனினும், தொல்லியல் ஆய்வுகள் கற்கால மக்களே இவ்வாறு இந்நூல்களில் அமானுஷ்யர்களாக விபரிக்கப் பட்டுள்ளனர் என்பதை உறுதி செய்துள்ளன.

கி.மு. 500 ஆம் ஆண்டளவில் வட இந்தியாவில் இருந்து ஈழம் நோக்கிய புலப்பெயர்வாக சிங்கள மக்களது மூதாதையான விஜயனின் குடியேற்றம் குறிப்பிடப்படுகின்றது.

இங்கு கூட விஜயன் பாண்டிய நாட்டு இளவரசியை மணந்த நிகழ்ச்சி இடம் பெற்றுள்ளதெனினும் பாளி நூல்களில் தமிழர்கள் பின்வந்த குடிகளாகவும், சிங்கள அரசின் அதிகாரத்திற்கு பங்கம் விளைவிப்பவர்களாகவும் ஆக்கிரமிப்பாளர்களாகவும், தவறான சமய நம்பிக்கையை கடைப்பிடிப் பவர்களாகவும் விபரிக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய வரலாறுகளே பள்ளிக் கூடங்களிலும், பல்கலைக்கழகங்களிலும், சர்வதேச அரங்கிலும் முன்னிலை பெற்று வந்துள்ளன. ஆனால் கடந்த கால் நூற்றாண்டாக ஈழத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் மேற்கூறிய கருதுகோள் வெறும் ஐதீகங்களே என்பதை உறுதி செய்துள்ளன.

சிங்கள மக்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டதாக நம்பப்பட்ட குடியேற்றமையங்கள், ஈமச்சின்னங்கள் என்பன காணப்படும் இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும், அகழ்வுகளும் கி.மு. 900 ஆம் ஆண்டளவில் இக் கலாசாரத்திற்குரிய திராவிட மக்கள் ஈழத்தில்

## தமிழர் பார்வை

குடியேறியதை உறுதி செய்துள்ளன.

### மொழியியல் சான்றுகள்

தமிழ் சிங்கள மொழிகளுக்கிடையே வசன அமைப்பில் காணப்படும் ஒற்றுமையானது தற்காலச் சிங்கள மொழியின் மூதாதை மொழி எனக்கூறப்படும் 'எலு' மொழி பழந்தமிழ்மொழிகளில் ஒன்றென்று கருத இடமளிக்கின்றது.

பாண்டி நாட்டில் வழக்கத்தில் இருந்த செந்தமிழ் மொழியும் கொடுந்தமிழ் மொழியாகிய எலுவும் ஈழத்தில் காணப்பட்ட பௌத்தத்துடன் வந்த பிராகிருத, பாளி, வடமொழி ஆகியவற்றின் செல்வாக்கினால் பழந்தமிழ் மொழியாகிய எலு சிங்கள மொழியாக வளர்ச்சி பெற்றது.

இதற்கு சிங்கள – தமிழ் மொழிக் கலாசாரங்களுக்கிடையே நிலவும் அடிப் படை ஒற்றுமைகளே ஆதாரமாக அமைகின்றன.

### தொல்லியல் சான்றுகள்

பாளி நூல்கள் தரும் குடியேற்ற ஐதீகம் வெறும் கட்டுக்கதை என்றும் இவற்றை நிரூபிக்க வரலாற்று தொல்லியல் சான்றுகள் இல்லை என்றும் 1965 களில் விமர்சனங்கள் தோன்றத் தொடங்கின.

புகழ்பூத்த வரலாற்று ஆசிரியரான ஜி.சி. மென்டிஸ், விஜயன் கதை சீகள அல்லது சிம்கள என அழைக்கப்பட்ட நாட்டின் பெயருக்குரிய கதைகளில் இருந்து புனைந்து வழங்கப்பட்ட ஐதீகமே எனக் கூற.

மானிடவியலாளரான எஸ்.பி.எஸ். சேனாரத்தினவும் இவற்றை நிரூபிக்கச் சான்றுகள் இல்லை என்றார். இவரது கூற்றை ஆதரித்த அமெரிக்க தொல்லியலாளரான விமலா 'பேக்லே' பின்வருமாறு கூறியுள்ளார்.

புத்த சமயம் ஏற்படுத்திய மூதன்மையான செல்வாக்கினால் ஈழம் பற்றிய புலமை சார்ந்த ஆய்வில் நீண்டகாலமாகப் பௌத்த இலக்கியமும் மொழியும் பற்றிய ஆய்வும் அவற்றுக்கான பொருள் கோடலுமே கவனம் செலுத்தப்பட்டன.

இதனால் சாசன– தொல்லியல் சான்றுகள் போன்ற இதர சான்றுகள் அடிக்கடி பௌத்த மத இலக்கிய கண்ணோட்டத்தில் அணுகப்பட்டன.

இதன் விளைவாக வரலாற்று ஆசிரியர்கள் ஈழத்தின் ஆதிவரலாற்றை முழுமையாக தீபவம்சம், மகாவம்சம் போன்ற பாளி இலக்கியங்களின் அடிப்படையில் படைத்துள்ளனர். இவ்விலக்கியங்கள் எத்தகைய பயனுடையனவாக இருப்பினும் மிகப்பழைய வரலாற்றை அணுகும் போது ஐதீக பாங்குடையனவாகவே உள்ளன.

பண்டைய நாகரிகத்தின் மையம் எனக் கருதப்பட்ட அநுராத புரத்தில் ஈழத்து தொல்லியல் திணைக்களமும் 1970இல் கந்தரோடை பொம்மரிப்பு ஆகிய இடங்களில் விமலா பேக்லே தலைமையிலும் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இக் குடியேற்றங்களின் கலாசாரமாகிய பெருங் கற்காலம் பற்றி 1980 இல் என்னால் ஆய்வு செய்யப்பட்டது.



ஓய்வு நிலைப் பேராசிரியர்
சி.க. சிற்றம்பலம்
உறுப்பினர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு

இதிலிருந்து பாளிநூல்கள் குறிக்கும் பிரதேசங்கள் தான் இப்பெரும் கற்காலக்கலாசார மையங்கள் என என்னால் இனங் காணப்பட்டதோடு தென்னிந்தியாவில் இக் காலத் திராவிட மொழிகளைப் பேசும் தமிழகம், கேரளம் ஆந்திரம், கர்நாடக மாநிலங்களில் வாழும் மக்களின் கலாசாரத்தின் படர்ச்சியே ஈழத்தில் உள்ள பெருங் கற்கால மையங்களில் காணப்படும் கலாசார எச்சங்கள் எனவும் சிங்கள, தமிழ் கலாசாரங்களும், மொழிகளும் இதன் வழி வந்தவையே எனவும் என்னால் இனங் காணப்பட்டன.

எனவே ஈழத்துத் தொல்லியல், மானிடவியல், மரபணுவியல், சமூகவியல், சாசனவியல் ஆகியனவற்றின் சான்றுகள் பௌத்தத்துடன் அறிமுகமான பிரா்கிருத மொழியும் அதன் கலாசாரமும் பரவ முன்னர் தென்னிந்தியத் தமிழ், தமிழோடு ஒத்த இதன் கிளை மொழி ஆகியன இங்கு காணப்பட்டமை எடுத்தியம்புகின்றன.

இதனை மனதில் கொண்டு தான் பேராசிரியர் சுதர்சன் செனிவரத்தினா பௌத்த கலாசாரம் பரவ முன்னர் இந்தோ ஒஸ்ரிக்முண்டா, திராவிட மொழிகள் பேசப் பட்டிருக்கலாம் என்ற கருத்தை ஏற்றிருந்தார். இவற்றிலிருந்து ஈழத் தமிழர் இந் நாட்டில் தொன்மையான இனத்தினர் என்ற முடிவுக்கு வருவதில் எந்த இடர்பாடும் இருக்க முடியாது.

**குறிப்பு:- பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அவர்கள் எழுதிய "ஈழத்தமிழர் தொன்மை" விரைவில் வலம்புரியில் வெளிவரும். (ஆ-ர்)**

## யாழ்.குடாநாட்டு கடற்றொழிலாளர்களின்...

05 ஆம் பக்க தொடர்ச்சி..

இன்று விடுவார்கள், நாளை விடுவார்கள் என்ற நம்பிக்கையெல் லாம் விலகிப்போய் விட்டது. பாரம்பரியமாகச் செய்து வந்த சிறகு வலைத் தொழில் பாதுகாப்புக்கு குந்தகம் எனக் கூறி தடை செய்யப்பட் டுள்ளது.

இதனால் பாசை யூரில் ஆயிரத்து 650 குடும்பங் களும், குருநகரில் ஆயிரத்து 600 குடும் பங்களும், கொழும்புத்துறையில் 50 குடும்பங்களும் தொழிலை முழுமையாக இழந்து நாளாந்த ஜீவனோபாயத்திற்கு அல்லல்படுகின்றனர்.

கடற்றொழிலை இழந்தவர்களுக்கு விசேட நிவாரணங்கள் எதுவுமே கிடையாது. எங் களைப்பற்றி கதைப்பதற்கும், எங்கள் நலன் பற்றி சிந்திப்பதற்கும் எவரும் இல்லை. எங்களை சாதாரண கடற்றொழிலாளர்களாக பார்க்கும் பக்குவ நிலையில் படைத்தரப்பிற்கு ஏற்படாதவரை எங்கள் சீவியம் சிக்கலுடையதாகவே இருக்கும்.

கடற்றொழில் இழப்பு எங்கள் எதிர்காலச் சந்ததியையும் பாழாக்கிவிட்டது. எமது பிள்ளைகளின் கல்வி முழுமையாக பாதிப்படைந்து விட்டது. ஒரே நேர உணவிற்கே வழியில்லாமல் தவிக்கும்போது பிள்ளை களைப் படிப்பிப்பது எங்ஙனம்.

எனவே எங்கள் மீது பிரயோகிக்கப்படும் 'தொழில் தடை' எங்கள் வாழ்வின் எல்லை கடந்த கல்வி இழப்பையும் தந்து விட்டதென்றார்.

**செபமாலை மத்தியூஸ் (குருநகர்)**

சேர்த்து வைத்ததெல்லாம் விற்றுத் தீர்ந்து விட்டது. இப்போது ஆழ்கடல் தொழிலுக்கு அனுமதித்தால் கூட எங்களிடம் எந்த வளமும் இல்லை என்ற நிலை வந்து விட்டது. மூன்றரைத் தொன் எடையுடைய ஒரு இயந் திரப் படகின் மூலம் ஆறு குடும்பங்கள் மீன் பிடித் தொழிலில் ஈடு படமுடியும்.

குருநகரில் 64 படகுகள் உள்ளன. இதே போல் வெளியக இயந்திர இணைப்புக் கொண்ட 236 படகுகள் உண்டு. ஒரு படகு



மூலம்நான்கு குடும்பங்கள் கடற்றொழில் செய்யலாம். இவையெல்லாம் இழந்து படகுகள்பழுதடைந்து போகின்றன.

கடற்றொழிலாளர்கள் கூலித் தொழில் செய்யும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்தம் அமுலில் இருந்தபோது ஏ–9 தரை வழிப் பாதையூடாக தினசரி எட்டு கூலர்களில் மீன் வகைகள் தென் பகுதிக்கு எடுத்துச் செல்லப் பட்டன. ஒரு கூலரில் 3 ஆயிரத்து 500 கிலோ கிராம் மீன்கள் ஏற்றமுடியும். உலகநாடுகளில் பொரு ளாதாரத்திற்குப் பங்காற்றுபவர்கள் பாராட்டப் படுவார்கள். ஆனால் கடல் வளத்தை பெருக்கிய எங்களுக்கு தொழில் தடை விதிக் கப்பட்டுள்ளது. இந்தத் துயரம் இனப்பிரச் சினை முழுமை யாகத் தீர்ந்தால் மட்டுமே இல்லாமல் போகும்.

தரிசனம் 8 ராவய

# இலங்கையில் நிரந்தரமாகத் தமிழர் வாழ்ந்ததற்கான சாட்சியம் இல்லை

## ஈழத்தமிழர் தொன்மை சிங்களவர் பார்வை

பேராசிரியர் கே. இந்திரபாலா எழுதிய History of Jaffna Kingdom என்ற நூலில் கிறிஸ்துவுக்குப் பின்னர் வரையான 10 ஆவது நூற்றாண்டு வரை இலங்கையில் நிரந்தரமாகத் தமிழர் வசித்தமைக்கான சாட்சியங்கள் இல்லை. கி.பி. 10 ஆம் நூற்றாண்டின் கால கட்டத்திலேயே நிலையான தமிழர் குடியிருப்புக்கள் தோன்றின.

இந் நாட்டில் தமிழர் குடியேறியமை தொடர்பாக வரலாற்றுத் தகவல்களில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

10ஆவது நூற்றாண்டானது இலங்கையில் 4ஆவது மஹிந்த மற்றும் 5 ஆவது அரசர்கள் ஆட்சி செய்த காலமாகும். அதாவது அநுராதபுர யுகம் இரத்தாவதற்கு நூறு வருடங்களுக்கு முன்பானதாகும்.

தென்னிந்தியாவிலிருந்தே தமிழர்கள் இங்கு வந்தனர். இவர்கள் தமிழ், கன்னடம், மலையாளம்மற்றும் தெலுங்கு மொழிகளை பேசினர். வியாபார நோக்கத்தோடே இங்கு வந்தனர். இவ்வாறு இங்கு வந்த குதிரை வியாபாரிகளான சேன மற்றும் குண்திக இந்நாட்டை ஆட்சி செய்த சுரதிஸ்ஸ மன்னனை கொலை செய்து ஆட்சியை கைப்பற்றினர்.

இந் நாட்டிற்குள் புத்த தர்மம் நிலை நிறுத்துவதற்கு முன்பு ஸ்திரமான, வியூகங்களுடனான ஆட்சி இருக்கவில்லை. அத்தோடு அரசர்கள் யுத்தத்திற்கு முகம் கொடுக்க தயாராகவும் இருந்ததில்லை. மேலும் பல தென்னிந்திய கம்பனிகளை சார்ந்தோரும் இங்கு வந்தனர். தேவநம்பிய தீச மன்னன் ஆட்சிக் காலத்திலேயே தமிழர்களின் அச்சுறுத்தலுக்கு இலங்கை உட்படுகிறது.

இதன்போது தென்னிந்தியாவில் பலமிக்க மூன்று இராஜ்ஜியங்கள் காணப்பட்டன.

சோழ, பாண்டி மற்றும் சேர (கேரள) என்ற இராஜ்ஜியங்களே அவையாகும். மூன்று தமிழ் இராஜ்ஜியங்களின் வட எல்லையில் அமைந்த காலிங்க தேசத்தை அடிமைப் படுத்தியதன் பின்னர், அசோக சக்கரவர்த்தியும் தனது அரச பதவியைத் துறந்து தர்மத்தை ஏற்றுக் கொண்டான். இலங்கையுடன் நட்புறவைப் பேணிவந்தான் அசோகசக்கரவர்த்தி.

ஏனெனில் அவன் கௌடில்ய சாஸ்திரத்தை பின்பற்றியவன். உனக்கு எதிரி இருப்பானானால் உனக்கு அயலிலுள்ள நாட்டுடன் நட்புறவை பேண வேண்டுமென்றே அச்சாஸ்திரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

சேர, சோழ, பாண்டிய, மன்னர்கள் தனக்கு எதிராளிகளாக இருந்தமையால் இலங்கையின் நட்புறவை எதிர்பார்த்தான். இதே நிலைப் பாட்டையே தேவநம்பிய தீசனும் கொண்டிருந்தான். மத்தாபய என்ற மூத்த சகோதரனுக்குச் சேரவேண்டிய அரச பதவியை பலாத்காரமாக பெற்றுக் கொண்டான் தேவநம்பிய தீசன்.

எனவே அவரிடமிருந்து வரும் அச்சுறுத்தல்களை சமாளிக்க காலிங்கம் வரை சென்று சக்கரவர்த்தியுடன் நட்புறவை பேணுவது நல்லதென அவன் எண்ணியிருக்கலாம். மத்தாபய தேவநம்பியதீசனுக்கு எதிராக தென்னிந்தியாவின் உதவியை கோரியிருந்தால், அதன் போது கௌடில்ய சாஸ்திரம் தேவநம்பிய தீசனுக்கு முக்கியமானதாக அமைந்திருக்கும். அதனால் அசோகனின் உதவி கிடைத்திருக்கும். அசோகனின் மகதப் பேரரசு இருக்கும் வரை தென்னிந்தியத் தமிழ் இராஜ்ஜியங்களால் தலை நிமிர முடியவில்லை. சேர, சோழ, பாண்டியர்கள் மகத இராஜ்ஜியத்தின் வீழ்ச்சிக்கு பின்னரே இலங்கை விடயத்தில் மூக்கை நுழைத்தனர்.


இதன் பின்னரான துட்டகைமுனு, சத்தாதிஸ்ஸ அரசர்கள் காலத்தில் தமிழர்கள் அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டது. பின்னர் சத்தா திஸ்ஸவின் மகனாகக் கருதப்படும் வலகம்பா அரசன் காலத்தில் தமிழர் அதிகாரம் மீண்டும் தலை தூக்கியது.

இக் காலத்தில் தமிழ் தலைவர்கள் இலங்கையை ஆக்கிரமித்ததோடு, அவர்கள் பின்னணியில் ஜைன மதத்தவர்கள் செயற்பட்டார்களென்பதற்கு சாட்சியங்களும் இருக்கின்றன. அவர்கள் அநுராதபுர ஆட்சியை கைப்பற்றிய பின்பு வலகம்பா மன்னன் தனது இராஜ்ஜியத்தை கை விட்டு வனம் சென்றான்.

அரசர்களின் ஒத்துழைப்பை பெறும் மதமே ஜைன மதம். இவர்கள் திட்டமிட்டு செயல்பட்டனர். அஹிம்சையே தமது அடித்தளமென்றனர். இவர்களை நிர்வாணமாக அல்லது கவசணத்துடன் காண முடிந்தது. அநுராதபுரத்தில் ஜைன குடியேற்றங்கள் உருவாகின. இவர்கள் நேரடியாகத் தென்னிந்தியாவுடன் தொடர்புகளை வைத்திருந்தனர். ஜைன மதத்திற்கு அரசமாளிகை கட்டுப்பட்டிருக்க வேண்டுமென்று நினைத்த இவர்கள் வலகம்பாவுக்கு எதிராகச் செயற்பட்டது ஒன்றும் ஆச்சரியப்படும் விடயமல்ல.

எனவே தான் அபயகிரிய பிரதம தளபதி வலகம்பா வெளியேறியபோது கறுப்பு சிங்கம் பயந்து ஓடுகிறது என பரிகசித்தனர். இலங்கைக்கு வரும் தென்னிந்தியர்கள் தாம் வாழ்வதற்கு இந் நாட்டை தேர்ந்தெடுத்தனர். இந்நாட்டில் தமிழர் பரம்பரையின் தோற்றம் இவ்வாறே இடம் பெற்றது.

கி.பி. முதலாவது நூற்றாண்டில் வசப அரசன் ஆட்சிக் காலத்திலும் இந்திய ஆக்கிரமிப்பு இடம்பெற்றதாக கூறப்படுகிறது. வசபன் மற்றும் அவன் மகன்



பேராசிரியர் மென்டிஸ் ரோஹணதீர

வங்க நாசிக திஸ்ஸ மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் நீர்ப்பாசனத்திட்டங்கள் அபிவிருத்தி கண்டன. இந்தியாவில் காவேரி நதி அணைக் கட்டை கட்டுவதற்காக 12ஆயிரம் இலங் கையர்களை சோழன் கொண்டு சென்றதும் வங்கநாசிக ஆட்சிக் காலத்திலேயே ஆகும். வங்க நாசிகவின் மகன் கஜபா சோழ இராஜ்ஜியத்திற்கு சென்று திரும்பி வருகையில் 24 ஆயிரம் பேரை கொண்டு வந்தான்.

பல்வேறுபட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்ட அந்த தமிழ் ஊழியர்கள் இந்நாட்டில் திருமணங்களை செய்து கொண்டனர். இதனால் இலங்கை குடிசனத்துடன் இணைந்து கொண்டனர். இலங்கையில் தனியான தமிழர் குடியேற்ற பிரதேசங்களும் இதன் போதே உருவாகின.

பின்னர் கி.பி. 443 இல் அதாவது 5ஆம் நூற்றாண்டில் தாதுசேன மன்னன் காலத்திற்கு முன்பு தென்னிந்தியாவின் திரிதர, தாதிய, பீதிய, பணய, மாரவிள, யமார போன்ற ஆக்கிரமிப்பாளர்கள் இலங்கை வந்தனர். அவர்களது ஆட்சி அதிகாரம் றுகுணு வரை வியாபித்தது.

கி.பி. 632-680 வரையான கால கட்டங்களில் இந்நாட்டின் இரண்டு அரச பரம்பரைகளுக்கிடையே மோதல்கள் காணப்பட்டன. இரு தரப்பினரும் தென்னிந்திய கூலிப் படையினரின் உதவியுடனேயே அரசர்களானார்கள்.

இவ்வாறு இங்கு வந்த கூலிப்படையினர் இங்கேயே தங்கி விட்டனர். பௌத்த சாத மற்றும் பௌத்த கூத இவர்களுள் முக்கிய தளபதிகளாவார்கள். இலங்கையின் அரசனாக முடி சூடிய மானவம்மன் பாண்டிய தேசத்திலிருந்து படைகளை கொண்டு வந்து இரண்டு தளபதிகளையும் தோல்வியடையச் செய்து கி.பி. 684 அரசாட்சியைப் பிடித்தான். அநுராதபுரத்திலிருந்து மாவட்டுகொட்டு (மன்னார்) வரையான பாதையின் இரு மருங்கிலும் நிரந்தரமான தமிழ் குடியேற்றங்கள் உருவாகின. இதற்கு சாட்சியங்கள் உள்ளது.

இவர்களுக்கு சிங்கள அரசர்கள் உதவிகளை செய்தார்கள். ஆனால் தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர்கள் இங்கு வரும் போதெல்லாம் இந்நாட்டில் வசித்த தமிழர்கள் ஆக்கிரமிப்பாளரையே ஆதரித்தனர்.

10 ஆம் நூற்றாண்டில் இரண்டாவது சேன மன்னன் காலத்தில் பாண்டிய நாட்டின் அதிகாரத்தை இலங்கை கைப்பற்றியதும் வரலாற்று முக்கியத்துவமிக்க சம்பவமாகும்.

சோழர்கள் பாண்டிய தேசத்தை ஆக்கிரமிப்பதற்கு முனையும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கையிலிருந்து படைகளை அனுப்பி பாண்டிய தேசத்தை சேன மன்னன் பாதுகாத்தான்.

இதனால் அண்டைய நாடுகள் இலங்கைக்கு எதிராளியாகின. தமிழர்கள் உள்ளடக்கப்பட்ட, சுவிசேஷ படையணியை ஏற்படுத்தவும் எமது அரசர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.


அரச மாளிகை பாதுகாப்பிற்காகவே ஏற்படுத் தப்பட்டது. அகம்படி பட்டையணி என்பதே அதன் பெயராகும். கி.பி. 1017 இல் ராஜராஜ சோழன் என்ற சக்கரவர்த்தி பாண்டிய தேசத்தையும் சேர தேசத்தையும் ஆக்கிரமித்து அடிமைப் படுத்தி இந்து சமுத்திரத்தின் வியாபார ஏகபோக உரிமையையும் கைப்பற்றினான். சுமத்திரா, ஜாவா, பர்மா போன்ற நாடுகள் உட்பட இலங்கையையும் ஆக்கிரமித்து அடிமைப்படுத்தினான்.

1055 இல் விஜயபாகு இளவரசன் அரச பதவியை ஏற்று 1070 இல் அநுராதபுரம் போகும் வரை அநுராதபுரத்தில் இந்து மதமே கோலோச்சியது. கோவில்கள் தோன்றின. அன்று நிர்மாணிக்கப்பட்ட சிவன் கோவில்களை இன்றும் காணமுடியும். கந்தளாய், பொல நறுவை பிரதேசங்களில் தமிழர் குடியிருப்புக்கள் தோன்றின. விஜயபாகு அரசனான பின்னர் அங்கிருந்த தமிழ் பிரபுக்களுக்கு எந்த விதமான இடைஞ்சல்களையும் செய்யவில்லை. அவர்களை அந் நிலையிலேயே வைத்திருந்தான். அரசனது மற்றும் நாட்டின் பாதுகாப்பிற்காக பிரபுக்களான அவர்களை ஏற்றுக் கொண்டான். விஜயபாகு அரசன் தனது பிரதம நீதியரசராக தமிழரையே நியமித்திருந்தான். தமிழ் அமைச்சர்களும் இருந்தனர்.

இதுவே இலங்கையில் தமிழர் பரம்பரை வரலாறாகும். நாடுகள் நெருங்கி இருக்கும் போது இவ்வாறான ஆக்கிரமிப்புகள் இடம் பெறுவது சாதாரணமானதாகும்.

இதன் பின்பு ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலும் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஆட்களை கொண்டு வந்தமைக்கும் தென்னிந்தியா எமது நாட்டுக்கு அண்மித்ததாக இருந்தமையே காரணமாகும்.

இலங்கையில் தமிழர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வழியேற்படுத்தியவர்கள் சிங்களத் தலைவர்களே என்பது வரலாற்றை புரட்டிப் பார்த்தால் தெரியும்.



# தரிசனம்

# விஜயனின் வருகைக்கு முன்பே இலங்கையில் தமிழர் வாழ்ந்துள்ளனர்



**றஊப் செய்ன்**
(M.phil – HIstory) Director (Centre for Development Studies)

## ஈழத்தமிழர் தொன்மை

## முஸ்லிம் பார்வை

இலங்கை இனப்பிரச்சினையின் கருத்தியல் மையமாக (Ideological Background) இருப்பது வரலாறே. சிங்களவர்களும் தமிழர்களும் இலங்கையில் முதலில் குடியேறியோர் தாம் தாம் என்று கட்டமைக்கும் வரலாற்றில் எதுவுண்மை எது திரிபு அல்லது இரண்டும் உண்மைகளா? என்ற கேள்வி எழுவது இயல்பானது. தேசிய உரிமை யதார்த்தத்தில் யாருக்குரியது என்ற அரசியல் வாதத்திற்கு வலிமை சேர்க்க வரலாற்றை உதவிக்கழைக்கும் போக்கையே இங்கு காண முடிகின்றது.

வட இந்தியாவிலிருந்து வந்த விஜயனும் அவனது 700 தோழர்களுமே இலங்கையின் முதற்குடிகள் என்று மஹாவம்சமும் பிற வரலாற்று நூல்களும் இடித்துக் கூறுகின்றன. அதன்படி சிங்களவர்கள் 2500 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் வாழ்கின்றனர்.

ஆனால் தமிழ் வரலாற்று ஆய்வாளர்கள் கருத்துப்படி விஜயன் இலங்கை வருவதற்கு 500 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு நாகர்கள், இயக்கர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் தமிழர்கள் தமிழ் இனத்தவர்கள். எனவே தமிழர்களின் வரலாற்றுப் பாரம்பரியம் மூவாயிரம் ஆண்டுகள் என்பது தமிழ் தரப்பு வாதம்.

சிங்கள வரலாற்று ஆய்வுகளுக்கு ஆதாரமாக மஹாவம்சமும் சூலவம்சமும் இருப்பதுபோன்று தமிழ் வரலாற்று ஆய்வுக்கு அடித்தளமாக மகாபாரதமும் இராமாயணமும் பிற்பட்ட காலத்திய யாழ்ப்பாண வைபவமாலையும் காணப்படுகின்றன.

இராமாயணம் இலங்கையின் வேந்தனாக இராவணனை முன்னிறுத்துகின்றது. இராவணன் ஆட்சியின் தலைநகராக திருகோணமலையும் உகந்தமலையும் இருந்ததாக இராமாயணம் கூறுகின்றது.

கி.மு. 145 இல் இலங்கை மீது படையெடுத்து வந்த எல்லாளன் திருகோணமலையில் தரை இறங்கினான். சுமார் 44 ஆண்டுகள் அவன் இலங்கை முழுவதையும் ஆட்சிசெய்தான். அவனைத் தோற்கடிக்கப் படையெடுத்த துட்டகைமுனுவின் படை தீகவாவியிலிருந்து புறப்பட்டதாக அறிகிறோம்.

ஆனால், எல்லாளனையும் துட்டகைமுனுவையும் சிங்கள, தமிழ் வரலாற்றாசிரியர்கள் நோக்கும் விதமே சர்ச்சைக்குரியது. துட்டகைமுனுவை சிங்களக் குறியீடாக திரிபுபடுத்துகின்றனர் சிங்கள வரலாற்றாய்வாளர்கள். பதிலுக்கு எங்கிருந்தோ வந்த அன்னியனான எல்லாளனை இலங்கைத் தமிழர்களின் குறியீடாக ஆக்கி மகிழ்கிறார்கள் தமிழ் வரலாற்றாய்வாளர்கள். இந்த இனநோக்கு வரலாற்று எழுத்தியல் நிறையவே வரலாற்று யதார்த்தங்களை மறைத்துவிட்டன.

விஜயன் இலங்கை வந்தபோது முதல் சந்தித்தது விஷ்ணு எனும் கடவுளையே என்று மகாபாரதம் குறிப்பிடுகின்றது. விஷ்ணுவுக்கும் விஜயனுக்கும் உள்ள உறவு என்னவென்பது தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.

விஜயன் சந்தித்த முதல் மனிதன் குவேனி எனப்படும் இயக்கர் குலப் பெண் என்கிறது ராஜவலிய. ஆனால் தமிழர் வரலாற்று நூல்கள் இயக்கர்களும் நாகர்களும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழ் இனத்தவர்கள் என்று எடுத்துரைக்கின்றது.

இதன்படி இலங்கையின் முதற்குடிகள் தமிழர்களே. அவர்களது பூர்வீகம் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் அதிகமானது என்பது தமிழ் வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாகும். குவேனி பற்றிய கதையாடல்கள் எதுவுமே மஹாவம்சத்தில் விரிவாக இடம் பெறவில்லை.

ஆயினும் இலங்கையில் 35 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மனித இனம் வாழ்ந்து வருவதாகப் புதைபொருள் ஆய்வுகள் உறுதிசெய்துள்ளன. அதன்படி நோக்கும்போது, இயக்கர்களுக்கும் நாகர்களுக்கும் முன்பே மனித இனம் இலங்கையில் வாழ்ந்துள்ளமை புலனாகின்றது.

மூவாயிரம் ஆண்டுகள் தமிழின வரலாறு உள்ளதென்றால் அதற்கான வரலாற்று ஆதாரங்களும் போதியதாக இருத்தல் வேண்டும். இதில் தமிழ் வரலாற்றாய்வாளர்கள் முன்வைக்கும் முக்கிய ஆதாரம் திராவிட மொழிக் குடும்பம் பற்றிய ஆய்வுகள் ஆகும்.

டாக்டர்.S. சுந்தராஜன் தனது Ancient Ceylon Country எனும் நூலின் 222 ஆம் பக்கத்தில் இவ்வாறு கூறுகிறார். மாலொனி என்ற சரித்திர ஆய்வாளர் பிராமி எழுத்துக்கள் பற்றி தீவிரமாக ஆராய்ந்தார். முடிவில் பிராமி எழுத்துக்கள் தென்னிந்தியாவிற்கு இலங்கையில் இருந்தே பரவியுள்ளன. மதுரை, திருநெல்வேலி முதலிய இடங்களுக்கும் பிராமி எழுத்துக்கள் பரவின. இவை காவேரி, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் உள்ள எழுத்துக்களை விடப் பழமையானவை என்கிறார் இவ்வாராய்ச்சியாளர். நாகர்கள் பேசிய மொழி தமிழ் அல்லது அதற்கு முற்பட்ட தமிழ் சார்ந்த ஒரு மொழியாக இருந்திருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

இந்த வகையில் நாகர்களையும் தமிழ் பேசுவோரையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாது என்பது இவர்களின் வாதமாகும். அப்படியானால் இயக்கர்கள் பேசிய மொழியும் தமிழா? என்ற கேள்வி எழுகின்றது.

தமிழ்த்தரப்பு வாதத்தில் இன்னொரு சுவாரஸ்யமான வாதம் உள்ளமையும் கவனிக்கத்தக்கது. அதாவது இலங்கையை ஆண்டவர்கள் என்று சிங்கள வரலாற்றாளர்களால் எடுத்துரைக்கப்படும் சில மன்னர்களும் நாக என்ற பெயர் தாங்கி இருப்பதால் அவர்களும் நாகர் குல தமிழர்கள் என்று வாதிக்கும் தமிழ் வரலாற்றாளர்களும் உள்ளனர்.

உதாரணமாக கல்லத்த நாக (109 BC), கோர நாக (63 BC), இல்ல நாக (36 AD), மஹல்லக நாக (136 AD), குத்த நாக (183 AD), சிறி நாக (184 AD) இவர்கள் எல்லாம் நாக இனத்தவர்கள். எனவேதான் எல்லாளனுக்கு எதிரான துட்டகைமுனுவின் படைப்பிரிவில் தமிழர்களும் இடம்பெற்றிருந்தார்கள் என்று சில தமிழ் வரலாற்று எழுத்தாளர்கள் குறிப்பிடுவர்.

ஆனால் இதை சிங்கள வரலாற்று ஆய்வாளர்கள் முற்றாக மறுக்கின்றனர். நாக என்ற சொல்லுக்கு மஹாவம்சம் வேறு அர்த்தங்களைத் தருவதாக இவர்கள் கூறுகின்றனர்.

தமிழ்த்தரப்பு வாதத்திலிருந்து நாம் புரிந்துகொள்ளும் உண்மை என்னவெனில், மூவாயிரம் வருடகால இலங்கையின் பூர்வீகக் குடிகள் தமிழர்களே. அவர்கள் விஜயனுக்கும் முந்தியவர்கள். அவர்களது தாய்மொழி தமிழ் என்பதாகும்.

அதேவேளை சிங்கள வரலாற்று நெடுகிலும் கூறப்பட்டு வரும் பல சிங்கள மன்னர்களும் நாகர் குலத்தினைச் சேர்ந்தவர்கள் என்பதாகும். ஆனால் தமிழர்களினதும் பௌத்தர்களினதும் அல்லது சிங்களவர்களினதும் வரலாற்றுப் பாரம்பரியத்தில் பல்வேறு பண்பாட்டு ஒற்றுமைகளும் உடன்பாடுகளும் உள்ளன. சமகாலத்தில் வடக்கிலும் கிழக்கிலும் இருந்த முஸ்லிம், தமிழ் மன்னர்களின் ஆட்சியும் 1000 ஆண்டுகள் நீடித்த றுஹுணு ராஜ்யத்தின் கீழ்தான் இருந்துள்ளது.

பிற்காலத்திலேயே யாழ்ப்பாண ராஜ்யமாகவும், கோட்டை ராஜ்யமாகவும், கண்டி ராஜ்யமாகவும் பிளவுபட்டுள்ளது. மஹாவம்சத்திலிருந்தோ மகாபாரதத்திலிருந்தோ அல்லது இராமாயணத்திலிருந்தோ மிக வரன்முறையான இலங்கையின் வரலாற்றை நாம் நிர்ணயம் செய்ய முடியாது.

ஒவ்வொரு இனமும் தமது தேசியத்தை நிறுவுவதற்கு வரலாற்றைக் கண்டுபிடிப்புச் செய்ய முடியாது. வரலாறு இப்படித்தான் இருந்தது என்று பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் எழும் தலைமுறைகள் அது பற்றித் தீர்மானிக்கவும் முடியாது. வரலாறு நதியைப் போன்று முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும்.

அதிலிருந்து நாம் பெற வேண்டிய படிப்பினைகள்தான் முக்கியமானவை. ஒரு துளி இரத்தமும் சிந்தாமல் பெற்ற சுதந்திரத்தின் பிற்பாடு 30 ஆண்டுகளாக இரத்தம் சிந்தும் இலங்கையர்களுக்கு இன்னும் எல்லாளன் நல்லவனா? விஜயன் நல்லவனா? என்ற விவாதம் எதற்கு என்று கேட்கத் தோன்றுகின்றது.

> சண்டை செய்ய விரும்புகிறவனுக்கு ஒவ்வொரு வேலியிலும் கம்பு தென்படும்.
>
> – இங்கிலாந்து

வலம்புரி

# எரிகின்ற நெருப்பிற்கு எண்ணெய் ஊற்றும் வேலை

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணப்பட வேண்டுமென எண்பது வீதமானவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளதாக எல்.எம்.டி. சஞ்சிகை மற்றும் ரி.என்.எஸ். நிறுவனம் கூறியுள்ளது.

மேற்படி வர்த்தக சஞ்சிகை நடத்திய ஆய்வில் எண்பது வீதமானவர்கள் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே தேவை எனக் கூறியுள்ளனராம்.

இதனைக் குறித்த சஞ்சிகை பெரிதுபடுத்தியுள்ளது. இதிலிருந்து இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே தேவை என்பதை குறித்த வர்த்தக சஞ்சிகை விரும்புகின்றதென்னும் முடிபுக்கு நாம் வரலாம்.

ஆய்வில் கலந்து கொண்டவர்களில் 80 வீதமானவர்கள் இராணுவத் தீர்வை வலியுறுத்தியுள்ளார்கள் என்பதை வைத்துக் கொண்டு அதனைப் பொதுமைப்படுத்துவதென்பது நியாயமாகமாட்டாது.

ஆய்வில் கலந்து கொண்டவர்கள் யார்? அவர்களின் பின்னணி யாது? ஆய்வை நடத்தியவர்கள் எத்தன்மையினர், ஆய்வு நடத்த வேண்டிய நோக்கமென்ன? அவர்களின் பின்னணியாக இருக்கக் கூடிய அரசியல் பலம் யாது? என்ற கேள்விகளுக்கான பதில்கள் இவ்விடத்தில் தேவையாகின்றது.

எண்பது வீதமானவர்கள் இராணுவத் தீர்வை ஆதரிக்கிறார்கள் எனப் பிரசித்தம் போடும் குறித்த சஞ்சிகை பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லை என்பதையே இவையெல்லாம் காட்டுகின்றன.

சுருங்கக் கூறின் நடிகர் கமலஹாசன் நடித்த தசாவதாரம் போலவே எல்.எம்.டி சஞ்சிகையும் நடந்துள்ளது. அதாவது பன்னிரண்டாம் நூற்றாண்டில் நடந்த ஒரு நிகழ்வை –அது நிஜமானதுதான் என ஆதாரப்படுத்த முடியாத கதையை திரைப்படமாக்கியதன் மூலம் இரண்டாம் குலோத்துங்க குலசேகர மன்னனையும் சைவ சமயத்தையும் நிந்திக்கும் செயலை அந்தத் திரைப்படம் செய்திருக்கின்றது.

சிவனின் ஆலயத்தில் திருமாலும், திருமாலின் கோவிலில் சிவனும் பிரதிஷ்டை செய்யப்படும் இக்காலகட்டத்தில் சைவம்–வைஷ்ணவம் என்ற பேதமை மறந்து சிவனையும் ஹரியையும் வணங்கும் ஒற்றுமை நிலை தோன்றியிருக்கையில் 'தசாவதாரத்தை' நடித்து –வெளியிட்டு மக்கள் சமூகத்திற்கு கமலஹாசன் தரும் செய்தி என்ன?

தனது தனிப்பட்ட வாழ்வில் நிதானத்தை பின்பற்ற முடியாத கமலஹாசன் இரண்டாம் குலோத்துங்க குலசேகர மன்னனை குறை காண விளைவது எத்துணை தவறோ அது போன்ற தவறையே குறித்த சஞ்சிகையும் செய்துள்ளது.

யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போது தமிழ் மக்கள் இன்னல்படும் வேளையில் இராணுவத் தீர்வையே எண்பது வீதமானவர்கள் ஆதரிக்கிறார்கள் எனக் கூறுவது எரிகின்ற நெருப்பிற்கு எண்ணெய் ஊற்றுவதாகவே அமையும்.

# இலங்கையின் ஏற்றுமதி பொருட்களுக்கு அமெரிக்காவின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை ரத்து

## தொழிலமைச்சர் கடும் அதிருப்தி

(கொழும்பு)

தேயிலை, இறப்பர் மற்றும் உற்பத்திப்பொருட்களுக்கு அமெரிக்கா வழங்கி வந்த ஜி.எஸ்.பி. வரிச்சலுகை ரத்துச் செய்யப்படவுள்ளது. இது குறித்து தொழில் உறவுகள் மற்றும் மனித வள அமைச்சர் அத்தாவுட செனவிரட்ன தனது கடும் ஆட்சேபனையை தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக தொழில் உறவுகள் மற்றும் மனித வள அமைச்சின் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் கூறியதாவது, தெற்காசிய வர்த்தகத்தொடர்புகளுக்கான அமெரிக்காவின் இலங்கைப்பிரதிநிதி மைக்கல் ஜேட்லட் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர் அமைச்சர் அத்தாவுட செனவிரட்னவை சந்தித்து இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை, றப்பர் மற்றும் இதர பொருட்களுக்கு அமெரிக்கா வழங்கி வந்த ஜி.எஸ்.பி. வரிச்சலு கையை ரத்துச்செய்வதாக அறிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள தொழிற்சங்கங்கள் இங்கு சர்வதேச தொழிலாளர்கள் சாசனங்கள் மதிக்கப்படுவதில்லை என்றும் ஊழியர்களின் உரிமைகள் மீறப்படுவதாகவும் தெரிவித்த குற்றசாட்டுகளை அடுத்தே ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அமெரிக்கப்பிரதி நிதிகள் தெரிவித்துள்ளனர் இதனைக் கடுமையாக ஆட்சேபித் துள்ள தொழில் உறவுகள் மனித வள அமைச்சர் அத்தாவுட செனவிரட்ன இந்தியா, பங்களாதேஷ் மற்றும் அமெரிக்காவை விட இலங்கையில் தொழிலாளர் சட்டங்கள் மதிக்கப்படுவ தாகவும் கடைப்பிடிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். இவ் வாறு பேச்சுவார்த்தைகளுக்கு வரும் போது முறைப்பாடு செய்த தொழிற்சங்கங்களையும் அழைத்து வந்திருக்க வேண்டும் என்றும் கடுமையாக அமைச்சர் கூறியுள்ளார்.

ஜி.எஸ்.பி.வரி தொடர்பாக தொழில் அமைச்சருக்கும் அமெரிக்க பிரதிநிதிகளுக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் எந்தவிதமான இணக்கப்பாடும் இன்றி முடிவுற்றது. (ஓ-6)

# இலங்கையின் யுத்த முன்னெடுப்புக்கு ஆயுதம் இடம்பெயர்ந்த வன்னி மக்களுக்கு உணவு

## இந்திய அரசின் செயல் பற்றி இடதுசாரி முன்னணி அமைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு ஆயுதங்கள் உட்பட அனைத்து உதவிகளையும் வழங்கி யுத்தத்தை இந்திய மத்திய அரசாங்கமே ஊக்குவிக்கின்றது. தமிழ் நாட்டுக்கு வாலையும் இலங்கைக்கு தலையையும் காட்டும் வியூகத்தை இந்திய அரசாங்கம் முன்னெடுக்கிறது.

சிங்கள பௌத்த இராச்சியத்தை அமைப்பதற்காக அரசாங்கம் முயற்சித்துவருகிறது என்று இடது சாரி முன்னணியின் அமைப்புச்செயலாளர் சமல் ஜயநித்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக சமல் ஜயநித்தி மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது,

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழ் நாட்டில் எதிர்ப்புகள் கிளம்புகையில் அதனை சமாளிப்பதற்காக வன்னிக்கு உணவுகளை அனுப்பும் இந்திய மத்திய அரசாங்கம் மறுபுறம் இலங்கைக்கு யுத்தத்தை முன்னெடுப்பதற்கான அனைத்து உதவிகளையும் வழங்குகின்றது. எனவேதான் இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கீழே வைத்துவிட்டுபேச்சுவார்த்தைகளை நடத்த முன் வரவேண்டும் என நிபந்தனை விதிக்கின்றது.

இது நடைமுறை சாத்தியமாகாது என்பது அரசாங்கத்திற்கு நன்கு தெரியும் .எனவே யுத்தத்தை முன்னெடுப்பதிலேயே அரசாங்கம் முழுக்கவனம் செலுத்துகின்றது. அதற்கு இந்தியாவும் உதவுகின்றது.

பூநகரியை படையினர் கைப்பற்றியதுடன் பட்டாசு கொழுத்தி சிங்கக்கொடிகளைப்பறக்கவிட்டு கேலிக்கூத்தான நடவடிக்கைகள்ளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

உள்நாட்டுக்குள் ஒரு பகுதியை பிடித்துவிட்டு ஏதோ வேறு நாட்டை கைப்பற்றியது போல செயற்படுகிறது. யுத்தத்தில் முனைப்பைக்காட்டும் அரசாங்கமும் அதனோடு இணைந்துள்ள இனவாத கட்சிகளும் சிங்கள பௌத்த இராச்சியத்தை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்காக வர்த்தகத்தில் தமக்கென தனி இடத்தைப் பெற்றுள்ள தமிழ் முஸ்லிம்கள்ளை இலக்கு வைத்து செயற்படுகின்றன. உலகம் முற்போக்குச்சிந்தனைகளுடன் முன்னேறுகையில் எமது நாடு தற்கால யுகத்திற்கு இழுத்துச் செல்லப்படுகின்றது. (ஓ)

# புள்ளியடிப்படையில் பதவி உயர்த்தும் கால எல்லை டிசம்பர் 31 வரைநீடிப்பு

(கொழும்பு)

இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ள ஆசிரியர்களை புள்ளி அடிப்படையில் சுய பதவி உயர்த்துவதற்கான கால எல்லையை கல்வி அமைச்சு இவ்வருடம் டிசம்பர் 31ஆம் திகதி வரை நீடித்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எம்.எம்.என்.ரி .பண்டார அறிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்று நிரூபம் ஒன்று நாட்டில் சகல மாகாண வலய கல்வி அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. புதிய சுற்று நிரூபத்தின் படி இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் 2 வகுப்பு ஒன்று , முதலாம் தரம் என்பவற்றிற்கு புள்ளி அடிப்படையில் நேரடி பதவி உயர்வு வழங்கப்பட முடியும்.

2004ஆம் ஆண்டுக்குப் பின்னர் மேற்படி தரங்களுக்கு பதவி உயர்வு பெற முடியாத தேக்க நிலையில் இருந்த பல ஆசிரியர்கள் இப்புதிய சுற்று நிரூபத்திற்கமைய பதவி உயர்வு பெறுவார்.

இதேவேளை தற்போது நடைமுறையில் உள்ள இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்புக்கு பதிலாக புதிய பிரமாணக்குறிப்பு 2009 ஜனவரி மாதம் தொடக்கம் அமுலாகவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# வெள்ளி நற்சிந்தனை

## பக்தியின் மொழி தமிழ் 47

'ஆசையே துன்பத்திற்குக் காரணம்' என்பது அனைவரும் அறிந்த பழமொழி. மனித வாழ்வியலில் ஆசை அற்று இருப்பது கடினமாகும். உணவு, உடை, உறையுள் என்ற இன்றியமையாத தேவைகளில் ஏற்படும் ஆசை பலருக்குத் துன்பத்தைத் தருகின்றது. புலனடக்கம் இல்லாமையால் ஆசையை அடக்குவது கடினம். சாதாரண மனித நிலையில் ஆசையால் ஏற்படும் துன்பங்களுக்கு முன்னோடியான செயற்பாடுகளை எல்லோரும் அறிய வேண்டும்.

வழிபாட்டு நெறியை மக்களிடையே நன்கு உணர்த்த எண்ணிய நாயன்மார்களில் சுந்தரமூர்த்தி நாயனார் ஆசையால் அல்லல் உற்றவர். தனது பட்டறிவைப் பாடல்களிலே குறிப்பிட்டுள்ளார்.

தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களை எண்ணிப் பார்க்கிறார். அவ்வாறு துன்பங்களை எதிர்கொள்வதற்கான காரணங்களையும் ஆராய்கிறார். தன்னைத்தானே விமர்சனம் செய்கிறார். தன்னுடைய செயற்பாடுகளை சீர்தூக்கிப் பார்க்கிறார். பிறர் செய்வதற்குக் கூசுகின்ற செயல்களைச் செய்தமை, குற்றமான செயல்களைச் செய்தமை, பிறரை எதிர்க்கும் செய்கை, பெண்களோடு தான் வாழ்ந்த வாழ்க்கை என்பவற்றையெல்லாம் மீட்டுப் பார்க்கிறார். அப்போது அவருக்கு ஒரு உண்மை தெளிவாகத் தெரிந்தது. தன்னுடைய ஆசை காரணமாகவே இச் செயற்பாடுகளை மேற்கொள்ள நேர்ந்ததை நன்கு உணர்ந்து கொண்டார். தன்னலங் கருதித் தான் செய்த தவறுகளை மற்றவர்களும் செய்யாமலிருப்பது நன்று என எண்ணுகிறார்.

வேதியர் குலத்திலே பிறந்த சுந்தரர் அழகனாக விளங்கியமையால் அரசர் நரசிங்க முனையரின் வளர்ப்பு மகன் ஆனார். அரசபோக வாழ்க்கைச் சூழலால் அவருடைய குண இயல்பில் தன்னலம் நேர்ந்தது. இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்ட பின்னரும் உலகியல் வாழ்க்கை இன்பங்களை நுகர இறைவனையே நாடினார். தோழமையுணர்வுடன் இறைவனைப்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

பாடி வழிபட்டு வேண்டியவற்றைப் பெற்றுக்கொண்டார். இரு மனைவியரை மணந்து இல்லறம் நடத்தினார். இறைவன் அவருடைய செயற்பாடுகளுக்குத் துணை நின்றமையால் சுந்தரரிடம் ஒரு செருக்குக் குடி கொண்டது. வாக்குறுதி தவறிய போது கண் பார்வை இழந்தார். அந்த அநுபவம் அவரைத் தன்னை அடியவர்களிலும் கீழான ஒருவன் என நன்கு உணரவைத்தது. இறைவனைத் தொடர்ந்து வழிபட்ட போது மெய்யறிவு பெற்றுத் தன் முரண்பட்ட செயற்பாடுகளைக் கைவிட்டார். பக்தி நெறி நின்று பிறர்க்கு அதை உணர்த்தும் பணியை மேற்கொண்டார். ஆசைகளை நீக்கி இறைவனை அன்புடன் வழிபட ஈசன் வாழும் கோயிலுக்குச் செல்ல வேண்டும் என்று எடுத்துரைத்து எம்மையும் வழி நடத்தியுள்ளார்.

"கூச நீக்கி குற்றம் நீக்கிச் செற்ற மன நீக்கி
வாச மல்கு குழலினார்கள் வஞ்ச மனை வாழ்க்கை
ஆசை நீக்கி அன்பு சேர்த்தி என்பு அணிந்து ஏறு ஏறும்
ஈசர்கோயில் எதிர் கொள் பாடி என்பது அடைவோமே"

# பிரித்தானிய நாடாளுமன்ற சதுக்கத்தின் முன்பு கவனயீர்ப்புப் போராட்டம்

## -ஆயிரக்கணக்கான தமிழர்கள் பங்கேற்பு

பிரித்தானிய நாடாளுமன்றத்தின் முன்பாகவுள்ள நாடாளுமன்ற சதுக்கத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பங்கேற்றுள்ளனர்.

நாடாளுமன்ற சதுக்கத்தின் முன்பாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் 3.30 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை இக் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றது.

இதில் பிரித்தானியாவில் உள்ள சில அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பெருமளவிலான தமிழர்கள் பங்கேற்றனர்.

பிரித்தானியப் பிரதமருடனான கேள்வி நேரம் புதன்கிழமை என்பதனாலும் அன்று பெருமளவிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு வருகை தருவார்கள் என்பதினாலும் புதன்கிழமையை கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு தேர்ந்தெடுத்திருந்ததாக நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தவர்கள் தெரிவித்தனர்.


பிரித்தானியாவின் தற்போது நிலவும் குளிரான காலநிலையிலும் பெருமளவிலான மக்கள் கவனயீர்ப்பு நிகழ்வில் பங்கேற்றிருந்ததுடன் தம்முடன் பாடசாலை சிறுவர்கள் மற்றும் குழந்தைகளையும் அழைத்து வந்திருந்தனர்.

மூன்று முக்கிய நோக்கங்களைக் கொண்டதாக இக் கவனயீர்ப்பு நிகழ்வு அமைந்தது.

◆ இலங்கை அரசினால் மேற்கொள்ளப்படும் தமிழின படுகொலையைத் தடுத்து நிறுத்துமாறு பிரித்தானிய அரசு வற்புறுத்த வேண்டும் எனக் கோருவது.

◆ இலங்கையில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை பிரித்தானிய அரசு அங்கீகரிக்கக் கோருவது.

◆ தமிழின எழுச்சிக்கு ஒத்துழைக்கும் தமிழக மக்களுக்கு நன்றி தெரிவிப்பது.




இலங்கை அரசினால் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகள் தொடர்பாகவும் அங்குள்ள தமிழ் மக்களின் அவலநிலை தொடர்பாகவும் பிரித்தானிய மக்களுக்கு எடுத்து விளக்கும் வகையிலான துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

அத்துடன் 'இலங்கை தமிழர்கள் மீதான இனப்படுகொலையை நிறுத்து', 'தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி', 'தமிழ்நாட்டுக்கு நன்றி- பிரித்தானிய தமிழர்', 'சிறந்ததேசம்- தமிழ்நாடு', 'நன்றியுள்ள மக்கள்–தமிழீழமக்கள்', 'அப்பாவி தமிழர்கள் மீதான குண்டு வீச்சை நிறுத்து', 'சிறிலங்கா ஒரு பயங்கரவாத அரசு', 'பிரித்தானியாவே சிறிலங்கா அரசு மீது பொருளாதாரத் தடையை விதி', 'ஐ.நா.வே சிறிலங்கா மீது ஆயுத தடையை விதி', 'ஐரோப்பிய ஒன்றியமே ஜீ.எஸ்.பீ.பிளஸ்-யுத்தநிதிக்கானவழி' எனும் ஆங்கில மற்றும் தமிழ் வாசகங்கள் அடங்கிய பதாதைகள் அங்கு வைக்கப்பட்டிருந்தன. (ஓ-6)

## சத்யஜித் ரேயின் சாருலதா திரைப்படம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் கல்விசார் / கலைத்துவம் சார் படக்காட்சித்தொடரில் காட்சிப்படுத்தப்படுகின்ற உலகின் தலைசிறந்த இந்திய நெறியாளரான சத்யஜித் ரேயின் ஆறு திரைப்படங்களின் வரிசையில் நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சாருலதா (1964) திரைப்படம் அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படக்காட்சியின் இறுதியில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறும். ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து பயன் பெற முடியு மென புற நிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ஓ)

## "பகவத்கீதை உபந்நியாசம்"

கோண்டாவில் கிழக்கு நாராயணா வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபாவில் பிரதி வெள்ளி தோறும் மாலை 4.30 முதல் 6 மணிவரை இடம்பெறும் ஆன்மீக நிகழ்வில் மாணவர்களின் சொற்பொழிவும் யாழ் .பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் எஸ்.கே.என்.தவராஜாவின் பகவத்கீதை தொடர் உபந்நியாசமும் இடம்பெறுகிறது. ஆத்மீக ஆர்வலர்களை கலந்து பயன் பெறுமாறு பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் ஆத்மீக சபா அறியத் தருகின்றது. (ஓ)

# வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் உள்ளூராட்சி வார நிகழ்வுகள்

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் உள்ளூராட்சி வார இறுதிவிழா இன்று வெள்ளிக்கிழமை நகராட்சி மன்றச் செயலாளர் கே. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி. மதுமதி. வசந்தகுமார் கலந்துகொள்ளவுள்ளார்.

வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு. சிவஸ்ரீ. சோ. தண்டபாணி தேசிகர், வல்வெட்டித்துறை சென் செபஸ்தியார் ஆலய அருட்தந்தை எம். பத்திநாதர் அடிகளார் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாள், வல்வெட்டித்துறை தபாலதிபர் எஸ். செல்வராஜா, வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி. கிருஸ்ணானந்தன், நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் கே. சகாதேவன், பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் எம். பரமானந்தம், பருத்தித்துறை நகராளுமன்ற செயலாளர் ஏ.ஏ.நடராஜா, கரவெட்டி பிரதேச சபைச் செயலாளர் வி.குலநாயகம், பரு.பிரதேச செயலாளர் எஸ். சந்திரயோகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், வல்வெட்டித்துறையின் வல்வை ஒன்றியத் தலைவர் எம்.தங்கவேல் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர்.

இவ் விழாவில் வல்வை நகராளுமன்றத்தின் முன்னாள் தலைவர்களின் திருவுருவப்படங்கள் திரைநீக்கமும் நகராட்சி மன்றத்தில் கடமையாற்றி அண்மையில் இளைப்பாறிய உத்தியோகத்தர்கள் கௌரவிப்பும் இடம்பெறும்.

உள்ளூராட்சி வாரத்தையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கல், முகாமைத்துவப் போட்டியில் வெற்றியீட்டிய சனசமூக நிலையங்களுக்கான பரிசில்கள் வழங்கல்,மென்பந்து போட்டியில் வெற்றியீட்டிய விளையாட்டுக்கழகங்களுக்கான பரிசில்கள் வழங்கல், கரப்பந்து, கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான பரிசில்கள் வழங்கல் என்பனவும் இடம்பெறவுள்ளன. முன்பள்ளிச் சிறார்கள், முன்பள்ளி ஆசிரியைகள், நகராட்சி ம்ன்ற உத்தியோகத்தர்கள் ஆகியோரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஓ-52)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு ❖ 04 ❖ 02 ❖ 1937



மறைவு ❖ 22 ❖ 10 ❖ 2008

அமரர்

**செல்வரத்தினம் சிவன்ரூபன்** B.Sc(cey),Dip. in. Ed.

(இளைப்பாறிய அதிபர் SLTS 1)

மங்கல நாணைச் சூட்டி மகிழ்வுடன் வாழ்வு தந்து
திங்களாய் ஒளிரச்செய்த நாதனே எந்தன் வாழ்வு
திங்கள் இல்லாத வானாய் இருளதில் கிடக்குதய்யோ
சிங்கமாய் வாழ்ந்த உங்கள் தோற்றம் எம்மனதில் நிற்கும்
போர்த்திமார் கல்வி கற்க சைக்கிளில் ஏற்றிச் செல்வீர்
வேர்த்திட சுமந்து வந்து மகிழ்வுடன் சேவை செய்தீர்
போர்த்திமார் தம்மை அன்று ஏற்றிட ஏலாதென்ற
வார்த்தையும் பேசி நீங்கள் மௌனமாய் உறங்கி விட்டீர்



எமது குடும்பத் தலைவரின் திடீர் மறைவுச்செய்தி கேட்டு எமதில்லம் வந்து இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மலர் வளையம் சாத்தி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதமூலம் ஆறுதல் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், மற்றும் வேறு வழிகளில் உதவித் துயர்பகிர்ந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

23-11-2008 (ஞாயிறு) அன்று நல்லூர் சட்டநாதர் கோவில் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

19/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(1917)

குடும்பத்தினர்


# உலகின் முதலாவது சுவாசக்குழாய் மாற்று அறுவைச் சிகிச்சை

ஸ்பெயின் விஞ்ஞானிகள் முழுமையான சுவாசக்குழாய் மாற்று சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டு சாதனை படைத்துள்ளனர். நோயாளியின் சொந்த என்பு மச்சை சகிதம் முழுமையான மாற்று சுவாசக் குழாய் ஒருவருக்கு பொருத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

அத்துடன் பக்க விளைவுகளுக்கு எதிராக மருந்துப் பாவனை அவசியமற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சையாகவும் இது விளங்குகிறது.

இரு பிள்ளைகளின் தாயான கிளாடியாகஸ்டில்லோ என்ற மேற்படி பெண்ணின் சுவாசக் குழாயில் ஏற்பட்ட சேதத்தையடுத்து அவரது நுரையீரலொன்றைக் காப்பாற்றும் முகமாகவே இந்த சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக ஐரோப்பிய விஞ்ஞானிகள்கூறுகின்றனர்.



அண்மையில் மரணமடைந்த நோயாளியிடமிருந்து சுவாசக் குழாயைப் பெற்று கஸ்டில்லாவின் என்பு மச்சை கலங்கள் மூலம் அதனை மேம்படுத்தி இந்த அறுவைச் சிகிச்சையில் பயன்படுத்தியதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். கஸ்டில்லாவின் சொந்த என்பு மச்சைக் கலங்கள் இந்த அறுவைச் சிகிச்சையில் உபயோகப்படுத்தப்பட்டமை காரணமாக மேற்படி சுவாசக் குழாயை எதுவித எதிர் விளைவுமின்றி அவரது உடல் ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

# இந்தியா ஹட்ரிக் வெற்றி



(கான்பூர்)

மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் டக்-வேர்த் லூயிஸ் முறையில் 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்திய இந்திய அணி தொடரில் ஹட்ரிக் வெற்றி பெற்றது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 7 ஒரு நாள் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு போட்டிகளிலும் வெற்றிபெற்ற இந்திய அணி தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் மூன்றாவது ஒருநாள் போட்டி நேற்று கான்பூரில் நடைபெற்றது.

இப்போட்டியில் இரு அணிகளிலும் ஒரு வீரர்கள் மாற்றம் செய்யப்பட்டனர். இந்திய அணியில் ஆர்.பி. சிங்கிற்கு பதிலாக இஷாந்த் சர்மாவும் இங்கிலாந்து அணியில் ஹர்மிசனுக்கு பதிலாக ஸ்வான் இணைக்கப்பட்டிருந்தனர். கான்பூர் மைதானத்தில் நேற்றுக் காலை மூடுபனி காரணமாக போட்டி தாமதமாக ஆரம்பமானதால் இரு அணிகளுக்கும் தலா 49 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான பெல்-பொப்ரா ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது. இந்த ஜோடி 14.3 ஓவர்களில் 79 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்தபோது பெல் 46 ஓட்டங்களுடன் முனாப்பட்டேலின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித் தலைவர் பீற்றர்ஸன் 14 ஓட்டங்களுடனும் கொலிங்வூட் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். அடுத்து பிலின்டொப் களமிறங்க மறுமுனையில் சிறப்பாக ஆடிய பொப்ரா தனது அரைச்சதத்தை கடந்தார். எனினும் பொப்ரா 60 ஓட்டங்களுடன் யுவராஜ்சிங் கின் பந்துவீச்சில் தோனியினால் ஸ்ரொம் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய ஓ வைஷ்ஷா சிறப்பாக ஆட மறு முனையில் பிளின் டொப் 26 ஓட்டங்களுடன் யூசுப் பதான் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பட்டேல் பொறுப்புடன் ஆட மறுமுனையில் ஓ வைஷ்ஷா சிறப்பாக துடுப்பெடுத்தாட இங்கிலாந்து அணி 43.3 ஓவர்களில் 200 ஓட்டங்களைக் கடந்தது. எனினும் ஓ வைஷ் ஷா 40 ஓட்டங்களுடன் ஹர்பஜன் சிங்கின் பந்து வீச்சில் சகிர்கானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து பட்டேல் 26, பிறிர் 5, ஸ்வான் 5, பிரோட் 0, அன்டர்ஷன் ஒரு ஓட்டத்துடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இங்கிலாந்து அணி 48.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 240 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் ஹர்பஜன்சிங் 3 விக்கெட்டுக்களையும் முனாப் பட்டேல், இஷாந்த் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சகீர்கான், யுவராஜ்சிங் மற்றும் யூசுப்பதான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு 49 ஓவர்களில் 241 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான காம்பீர் -சேவாக் ஜோடி அதிரடி இணைப்பாட்டத்தை வழங்கினர்.

எனினும் 6.5 ஓவர்களில் இந்திய அணி 31 ஓட்டங்களை எடுத்தபோது காம்பீர் 14 ஓட்டங்களுடன் பிளின்போப்பின் பந்துவீச்சில் பிரோட்டியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ரெய்னா வந்த வேகத்திலேயே ஒரு ஓட்டத்துடன் பிரோட்டினால் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு வெளியேறினார்.

அடுத்து அடுத்து விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இந்திய அணிக்கு மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த சேவாக்-ரோகித் சர்மா ஜோடி சிறப்பாக துடுப்பெடுத்தாடி தூக்கி நிறுத்தினார்.

இதில் சேவாக் தனது அரைச்சதத்தை பூர்த்திசெய்தார். இந்த ஜோடி இணைப்பாட்டமாக 73 ஓட்டங்களை எடுத்தபோது ரோகித்சர்மா 28 ஓட்டங்களுடன் ஸ்வானின் பந்துவீச்சில் விக்கெட்காப்பாளர் பிறிரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய யுவராஜ்சிங் சிறப்பாக ஆட மறுமுனையில் சேவாக் 68 ஓட்டங்களுடன் பிளின்டோப்பின் பந்துவீச்சில் கொலிங்வூட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 25.2 ஓவர்களில் 125 ஓட்டங் களை மாத்திரமெடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்து நிலைகுலைந்தது. எனினும் 5 வது விக்கெட்டுக்காக யுவராஜ்சிங்குடன் இணைந்த அணித்தலைவர் தோனி பொறுப்புடன் துடுப்பெடுத்தாடி இந்திய அணியை மீட்டெடுத்தார். இதில் யுவராஜ்சிங் 31 பந்துகளில் (2 பவுன்டறிகள் ஒரு சிக்சர் உட்பட) 38 ஓட்டங்களை எடுத்தபோது பிளின்டொப்பின் பந்துவீச்சில் பிரோட்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து தோனியுடன் இணைந்த யூசுப்பதான் அதிரடியாக ஆட இந்திய அணி 40 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களை எடுத்தது. இந்நிலையில் போதிய வெளிச்சம் இல்லாமையால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. எனினும் தொடர்ந்து நடத்த போதிய வெளிச்சமின்மையால் டக்-வேத் லூயிஸ் முறையில் 16 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றியென நடுவர்கள் அறிவித்தனர்.

டக் வேத் லூயிஸ் முறையில் இந்திய அணி 40ஓவர்களில் 182 ஓட்டங்களை எடுக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதில் அணித் தலைவர் தோனி 29 ஓட்டங்களையும் யூசுப்பதான் 12 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர். பந்துவீச்சில் பிளின்டொப் 3 விக்கெட்டுக்களையும் பிரோட், ஸ்வான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் 7 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்திய அணி 3:0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இப் போட்டியில் இந்திய அணியின் வெற்றிக்கு திருப்பு முனையை அமைத்த ஹர்பஜன்சிங் ஆட்ட நாயகனாக தெரிவானார்.

(5)

# முரளிதரன், மென்டிஸ் சுழல் ஜாலம்; சிம்பாவேயை வீழ்த்தியது இலங்கை

(ஹராரே)

முரளி, மென்டிஸின் துல்லியமான பந்து வீச்சால் சிம்பாவேயுடனான முதலாவது ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

சிம்பாவேயுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது. இத்தொடரின் முதலாவது போட்டி நேற்று ஹராரேயில் நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தனா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி முரளி, மென்டிஸின் சுழலிற்கு ஈடுகொடுக்க முடியாமல் 31 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 127 ஓட்டங்களை மாத்திரமெடுத்தது.

இதில் தைடி ஆட்டம் இழக்காமல் 36 ஓட்டங்களையும் சிபாபா 25, மற்சிகென்ஜேரி 21, மஷகட்ஷா 15, ஸிபான்டா 9 ஓட்டங்களையெடுத்ததுடன் பின்னிலை துடுப்பாட்டவீரர்கள் ஆறு பேர் ஓட்டம் எதனையும் எடுக்காமல் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் முத்தையா முரளிதரன் 4 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக 14 ஓட்டங்கள் மாத்திரம் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் மென்டிஸ் 6 ஓவர்கள் பந்துவீசி 26 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் சாய்த்ததுடன் மகரூப், குலசேகர ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 128 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சங்கக்காராவின் நிதானமான ஆட்டத்தால் 33.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 130 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் குமார் சங்கக்காரா ஆட்டமிழக்காமல் 97 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 50 ஓட்டங்களையும் உடவத்த 38 ஓட்டங்களையும் ஜெயவர்த்தனா 12, கப்புகெதர 16 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிறைஸ் 2 விக்கெட்டுக்களையும் சிகுப்புரா ஒரு விக்கெட் டையும் வீழ்த்தினர். இவ்வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இலங்கை அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது. இப்போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு வழி சமைத்த முரளிதரன் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

# சௌத்தியின் சிறப்பான பந்துவீச்சில் அவுஸ்திரேலிய அணி சுருண்டது

(பிறிஸ்பேன்)

சௌத்தியின் சிறப்பான பந்துவீச்சில் முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 214 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 டெஸ்ட் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று பிறிஸ்பேனில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோரி முதலில் துடுப்பெடுத்தாட அவுஸ்திரேலிய அணியை அழைத்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் அடுத்தடுத்து ஆட்டமிழக்க அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 214 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இதில் மைக்கெல் கிளார்க் 98 ஓட்டங்களையும் ஹசி 35, சைமண்டஸ் 26, ஸ்டுவெட் கிளார்க் 13 மற்றும் ஹட்ரிச் 10 ஓட்டங்களையும் எடுத்ததுடன் ஏனையோர் இரட்டை இலக்க ஓட்டத்தைகூட எடுக்காமல் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் சௌத்தி 4 விக்கெட்டுக்களையும் ஓபிறின், ரைடர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பார்ட்டீன், விக்டோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 7 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் ரெட்மோண்ட் 3, ஹவ் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலிருந்தனர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

(5)

A TIME FOR CELEBRATION
A CHILD IS BORN
PEACE TO OUR NATION
CHRISTMAS CAROLS
PRESENTED BY
JAFFNA COLLEGE
ON
23RD NOVEMBER, 2008



AT
4.00 PM
CATHEDRAL
VADDUKODDAI

ALL ARE CORDIALLY INVITED

(c-1789)

## திருவாரூர்...

வந்தபோது திருக்கொல்லிக்காடு என்ற இடத்தில் அதை நூற்றுக்கணக்கான இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தொண்டர்கள் கறுப்புக் கொடிகளுடன் வழிமறித்தனர்.

இலங்கையில் போர் நிறுத்தம் சாத்தியமில்லை என்ற கருத்து தெரிவித்த ரணிலுக்கு எதிராக கோஷமிட்ட தொண்டர்கள் அவரது காரை சுற்றி வளைத்தனர். அவர்களைப் பொலிஸாரால் அப்புறப் படுத்த முடியவில்லை. இதனால் அங்கு பெரும் பதற்றம் நிலவியது.

இதையடுத்து கூடுதல் பொலிஸார் விரைந்து வந்து 30 நிமிடங்கள் போராடி ஆர்ப்பாட்டக்காரர்களை அப்புறப்படுத்தி ரணிலின் கார் செல்ல வழியேற்படுத்தினர்.

இந்த சம்பவம் தொடர்பாக 49 இந்திய கம்யூனிஸ்ட் தொண்டர்களையும் அந்தக் கட்சியின் பஞ்சாயத்து தலைவர் பாண்டியனையும் பொலிஸார் கைது செய்தனர்.

பின்னர் ரணில் மதுரை புறப்பட்டுச் சென்றார். மீனாட்சியம்மன் கோயிலில் வழிபாடு நடத்திய பின் விமான மூலம் சென்னை திரும்பிய ரணில் அங்கிருந்து கொழும்பு வந்தடைந்தார். (ச-5)

## இந்திய அரசின்...

எவ்வாறு, எப்பொழுது எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கப்படும் என வினவிய போதே மேற்கண்டவாறு தெரி வித்தார்.

போல் கெஸ்டெல்லா மேலும் தெரிவிக்கையில், இந்தியாவிடமிருந்து நிவாரணப் பொருட்கள் எம்மிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

பொருட்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ஐ.சி.ஆர்.சி.) வன்னியிலுள்ள மக்களுக்கு நேரடியாகக் கையளிக்கும். அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அமைவாகவன்றி மக்களின் தேவைகளுக்கு ஏற்பவே எமது விநியோகப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

வன்னியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் 130 பணியாளர்கள் கடமையில் ஈடுபடவுள்ளனர். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் 150 தொடண்டர்களும் இவர்களுடன் பணியாற்றுவர்.

அவர்கள் ஏற்கனவே வீடு வீடாகச் சென்று மக்களின் தேவைகளை இனம்கண்டு 25 ஆயிரம் குடும்பங்கள் அடங்கிய பயனாளிகளின் தேவை மதிப்பீட்டுப் பட்டியலை தம்வசம் வைத்துள்ளனர்.

இவர்களுக்கே இந்திய அரசின் நிவாரணப் பொருட்கள் வழங்கப்படும்.

ஓமந்தைச் சோதனைச் சாவடி கடந்த சில தினங்களாக மூடப்பட்டுள்ளபோதும் அவசரத் தேவைகளின் அடிப்படையில் சில நெகிழ்வுத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு போக்குவரத்து மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் கடந்த காலங்களில் இடம்பெற்றிருக்கின்றன.

அதேபோன்று ஓமந்தைச் சோதனைச் சாவடி மூடப்பட்டபோதும் அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் மேற்கொள்ளப்பட்ட சமரச பேச்சுவார்த்தையை அடுத்து வன்னியிலிருந்து வவுனியாவுக்கு 24 நோயாளிகளை நாம் சிகிச்சைக்காக கொண்டு வந்திருந்தோம்.

அதேபோன்ற நெகிழ்வுத்தன்மை இந்த நிவாரணப் பொருட்கள் விநியோகத்தின் போதும் ஏற்படும் என நாம் நம்புகின்றோம் எனத் தெரிவித்தார். (ச)

## யாழில் உள்ள...

வைத்தியசாலை நிர்வாக அலுவலர், யாழ்.நகரப் படைகளின் கட்டளைத் தளபதி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட மற்றும் பலரும் கலந்து கொண்டார்கள். இக்கலந்துரையாடலில் வைத்தியர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக இராணுவத்தினரும் பொலிஸாரும் வைத்தியசாலையில் கடமையில் இருப்பர் என இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து சிங்கள வைத்தியர்கள் தொடர்ந்தும் கடமையாற்ற இணக்கம் தெரிவித்துள்ளனர். யாழ்.போதனா வைத்தியசாலையில் 28 வைத்தியர்களும் பிரதேச வைத்தியசாலைகளில் 13 பேருமாக மொத்தம் 41 சிங்கள வைத்தியர்கள் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு நாவற்காடு வைத்தியசாலையைச் சேர்ந்த சிங்கள வைத்தியரான பாலித்த பத்மகுமார என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து வடக்கு கிழக்கில் கடமையாற்றும் சிங்கள வைத்தியர்கள் வெளியேறத் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5,49)

## முகமாலை முதல்...

பில் இராணுவப் பேச்சாளர் தொடர்ந்தும் கூறியதாவது,

யாழ்ப்பாணம் முகமாலை மற்றும் கிளாலி பாதுகாப்பு முன்னரங்கு நிலையின் சுமார் 8 கிலோமீற்றர் நீளமான நிலப்பரப்பு படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இராணுவ ரீதியில் மிக முக்கிய தளமாக விளங்கும் முகமாலை மற்றும் கிளாலி பாதுகாப்பு முன்னரங்கு நிலைகளைக் கைப்பற்றுவதற்காக படையினர் மேற்கொண்ட முன்நகர்வு முயற்சியினை முறியடிக்கும் பொருட்டு விடுதலைப் புலிகளால் கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

புலிகளின் தாக்குதலை எதிர்கொண்டு படையினராலும் பதில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கடந்த 15 ஆம் திகதி முதல் குறித்த பகுதியில் இடம்பெற்ற இரு தரப்புக்கிடையிலான மோதல்களின்போது படையினர் மேற்கொண்ட ஷெல் மற்றும் ஆட்டிலறி தாக்குதல்களில் மேற்படி பாதுகாப்பு முன்னரங்கு நிலைகளை அண்மித்ததாக அமைக்கப்பட்டிருந்த புலிகளின் மண்ணணை ஒன்று முற்றாக தாக்கியழிக்கப்பட்டுள்ளது.

குறித்த பாதுகாப்பு முன்னரங்கு நிலையைக் கடந்து படையினர் முன்நகர்ந்துவிடக் கூடாது என்னும் பட்சத்திலேயே இந்த அணை கட்டப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

நாகர்கோவில் முதல் கிளாலி வரை நீண்டு செல்லும் இந்த அணை முற்றாக அழிக்கப்பட்டதையடுத்தே குறித்த பாதுகாப்பு முன்னரங்கு நிலை முழுமையாக கைப்பற்றப்பட்டுள்ளது. (ச-5)

## வன்னி நோக்கிய...

யின் இனப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்திய தலைவர்களின் நிலைப்பாடாகவுள்ளது. இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முடியும் என்றும் அவர் கூறினார்.

இலங்கையின் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க டெல்லி சென்று பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட தலைவர்களை சந்தித்து பேசினார். நேற்று சென்னை வழியாக இலங்கைக்கு வந்த அவர் நிருபர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது, இலங்கையில் நடைபெற்றுவரும் பிரச்சினைகள் தொடர்பாக இந்திய தலைநகர் டெல்லிக்கு சென்று பிரதமர் மன்மோகன் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் பா.ஜ.க., மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர்களை சந்தித்து பேசினேன்.

இது தொடர்பாக இந்திய தலைவர்கள் தங்களுக்கு கிடைத்த தகவல்களை தெரிவித்தனர். எப்படியும் இந்தப் பிரச்சினைக்கு உடனடி தீர்வு காணவேண்டும் என்றே இந்திய தலைவர்கள் நினைக்கிறார்கள். அதையே நானும் வலியுறுத்தினேன். இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண உடனடியாகப் பேச்சு நடத்த வேண்டும்.

இலங்கையில் உள்ள பிரதான எதிர்க்கட்சியான எங்களுடைய கட்சி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கட்சி, தமிழ்த்தேசியக்கட்சி மற்றும் முஸ்லிம் அமைப்புகள் ஆகியவை இந்தப் பேச்சுவார்த்தையில் இடம்பெறவேண்டும். இதுவரையிலும் இந்திய அரசு இந்தப் பிரச்சினையில் எடுத்து வரும் நடவடிக்கைகள் திருப்தி அளிப்பதாக அமைகிறது என்றார். (ச-5)


சைவபரிபாலன சபை-யாழ்ப்பாணம்

பரிசளிப்பு விழா

(2007ஆம் ஆண்டிற்குரியது)

காலம்: 23.11.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி

இடம்: நாவலர் ஆச்சிரம மண்டபம்

(66, கல்லூரி வீதி, நீராவியடி)

☆ பிரதம விருந்தினர்

திரு. S.K. யோகநாதன்

(பீடாதிபதி யாழ்/தேசிய கல்வியியற் கல்லூரி)

☆ சிறப்பு சொற்பொழிவு

திரு. ச.லலீசன் அதிபர்

யாழ்/கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை

☆ யாழ்/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

அனைத்து தமிழ் மக்களையும் விழாவில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

இரா.செல்வவடிவேல்
தேர்வுச் செயலாளர்
சைவபரிபாலன சபை.

(C -1788)


## கிளிநொச்சியை பாது...

சென்னையில் இருந்து வெளிவரும் நக்கீரன் ஏட்டில் வெளியான சந்திரகாந்தன் எம்.பியின் பேட்டி அப்படியே இங்கு பிரசுரமாகிது.

இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த 22 எம்.பிக்கள் உள்ளனர். இவர்களில் முக்கியமானவர்களில் ஒருவர் அம்பாறை மாவட்ட எம்.பி.சந்திரநேரு சந்திரகாந்தன்.வன்னி பெருநிலப்பரப்பில் தமிழர்களுக்கு எதிராக உக்கிரமான தாக்குதல்களை நடத்தி வரும் இலங்கை இராணுவம் கிளிநொச்சியை வீழ்த்துவோம் என சபதம் ஏற்றிருக்கிறது.

இந்த சூழ்நிலையில் கிளிநொச்சிக்குள் சென்று களம் கண்டு வந்துள்ளனர் சந்திரகாந்தனும் மற்றொரு எம்.பி. ஜெயானந்தமூர்த்தியும். பிரபாகரனையும் இவர்கள் சந்தித்தாக வந்துள்ள தகவல்களை அறிந்து சந்திரகாந்தனை தொடர்பு கொண்டோம். அவர் நக்கீரனுக்கு அளித்த பேட்டியிலிருந்து,

**வன்னிப் பெருநிலப்பரப்பில் என்னதான் நடந்து கொண்டிருக்கிறது?**

தமிழினத்தை அழிக்கும் அகோரத் தாக்குதலை நடத்திவருகிறது சிங்கள இராணுவம். பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்று சொல்லிக் கொண்டு தமிழர்களை படுகொலை செய்து கொண்டிருக்கின்றார் ராஜபக்ஷ.

அதாவது வட கிழக்கிலுள்ளவர்கள் (தமிழர்கள்) எல்லாம் பயங்கரவாதிகள். மற்றவர்கள் எல்லாம் யுத்த ஜீவிகள் என்கின்ற மனோநிலையில் ஒரு இனத்தை அழிக்கும் போரை நடத்துகிறார்.

நாங்கள் கண்ணால் பார்த்தோம். தமிழர்களின் வாழ்விடங்கள், வழிபாட்டுத் தலங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள், மருத்துவக் கூடங்கள், வியாபார ஸ்தலங்கள் என அனைத்தும் மூர்க்கத்தனமாக அழிக்கப்பட்டுள்ளன.

குண்டு வீச்சுக்களில் இருந்து தப்பித்துக் கொள்ள காடுகளில் தஞ்சமடைந்திருக்கிறார்கள் மக்கள். மரங்களுக்கிடையே டெண்ட் போட்டு தங்கியுள்ளனர். உணவு இல்லை, மாற்று உடை இல்லை, மருந்து கிடையாது, ஏன் குடிக்கத் தண்ணீர் கூட இல்லை.

குண்டு வீச்சில் நஞ்சாக மாறிக்கிடக்கிறதய்யா... குளம், குட்டைகள் எல்லாம். வாந்திபேதி, வயிற்றுப் போக்கு, கடும் காய்ச்சல் என சொல்லொணா துயரத்தில் தவிக்கின்றன பச்சிளம் குழந்தைகள். விஷ ஜந்துக்களோடுதான் வாழவேண்டியிருக்கி றது.

அழக்கூட நேரமில்லாமல், சிங்கள இராணுவத் தாக்குதலில் செத்து மடியும் தங்கள் உறவுகளை, குழந்தைகளை அவசர கதியில் புதைத்துவிட்டு பாதுகாப்புத் தேடி ஓடிக்கொண்டே இருக்கின்றனர்எமது மக்கள்.

எங்கு பார்த்தாலும் சோகமே சூழ்ந்திருக்கிறது. ஆனாலும் விரைவில் தீர்வு கிட்டும் என்கிற தன்னம்பிக்கை மட்டும் எமது மக்களிடம் ஆழமாக எதிரொலிக்கிறதய்ய...

**புலிகளின் முக்கிய பகுதியான பூநகரியைப் பிடித்துவிட்டோம் விரைவில் கிளிநொச்சியை வீழ்த்திவிடுவோம் என்கின்றார் அதிபர் ராஜபக்ஷ. பூநகரி இழப்புக்குறித்து என்ன கருதுகிறீர்கள்?**


GRADE: 6,7 -ENGLISHMEDIUM

2009 கல்வி ஆண்டிற்காக..

முற்றிலும் புதிய முறையில் அனுபவம் மிக்க ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டலில் மாதாந்தப் பரீட்சைகளோடு

முதலாவது பரீட்சைவரை கட்டணம் இலவசம்!!

தரம்:5 புலமைப்பரிசில் வகுப்பு

வெற்றித்தேர்வுதிருமலை கணேசலிங்கம் அவர்களின்

மாவட்டரீதியிலான தொடர்பரீட்சையோடு

அகில இலங்கையில் சாதனை படைத்த ஆசிரியரின் சிறப்பான வழிகாட்டலில்!



2008 இந்தச் சாதனையாளர்களைப் போல நீங்களும் மகுடம் பெற்றிட!

சயன்ஸ்அக்கடமி

(நல்லூர். முருகன் ஆலயம் முன்பாக.)

புதிய வகுப்புகள் ஆரம்பம்.

2009 கல்வி ஆண்டிற்கான

தரம்:4முதல் O/Lவரை

GRADE :6,7 - ENGLISH MEDIUM.

1) நீங்கள் எதிர்பார்க்கும் ஆசிரியர் குழு.

2)மாதாந்தப்பரீட்சை 3)கணிப்பீட்டறிக்கை

4)பெற்றோர் சந்திப்பு 5)வினாவிடைவகுப்பு

இத்தனையும் ஒரே இடத்தில். சரியான வழிகாட்டலில்

புதிய அனுமதிகள் 30.11.2008 வரை

சயன்ஸ்அக்கடமி

(நல்லூர். முருகன் ஆலயம் முன்பாக.)

(அரியாலை.392. நாவலர் வீதி.)


**கிளிநொச்சியை வீழ்த்திவிட சாத்தியமுண்டா?**

ராஜபக்ஷ என்ன மாதிரியான கல்குலேட்டர் வைத்திருக்கிறார் என்று தெரியவில்லை. அதில் என்ன மாதிரி கணக்குகளைப் போட்டு கிளிநொச்சியைப் பிடித்துவிடுவோம் என்று சொல்கிறார் எனவும் புரியவில்லை.

கிளிநொச்சியை வீழ்த்திவிடுவோம் என்று ஓராயிரம்முறை சொல்லிவிட்டார். ஒருமுறைகூட அது நிறைவேறவில்லை. புலிகளின் பாதுகாப்பு வலயத்திற்குள் இருக் கிறது கிளிநொச்சி. இதனைப் பிடிப்பதற்காக மும்முனைத் தாக்குதல் நடத்துகிறது இராணுவம். அதனை முறியடித்துக் கொண்டிருக்கிறார்கள் புலிகள்.

நான் நேரில் பார்த்தவரையில் வலிந்த தாக்குதலை (தற்காப்பு) மட்டுமே தற்போது நடத்துகின்றனர் புலிகள்.

இதற்கே தாக்குப்பிடிக்க முடியாமல் தான் திணகிறது இராணுவம். ஆனால் உக்கிரமான தாக்குதல், முன்னேறிவிட்டது என்றெல்லாம் பரப்புரை செய்கிறது சிங்கள அரசு.

உக்கிரமான தாக்குதலை நடத்துகிறார்கள் உண்மைதான். ஆனால் அவர்கள் முன்னேறவில்லை கடந்த 2 மாதங்களில் இவர்கள் நடத்திய உக்கிரமான தாக்குதல்களுக்கு வெற்றி கிடைத்திருக்குமானால் ஒரு கிளிநொச்சியல்ல, பத்துக் கிளிநொச்சியைப் பிடித்திருக்க வேண்டுமே! ஏன் முடியவில்லை? பூநகரி என்பது ஒரு ஆட்டிலறித்தள ம்.அங்கு போராளிகள் எவரும் இல்லை. சண்டையே நடக்காத ஒரு இடத்தைப் பிடித்துள்ளது இராணுவம்.

அவ்வளவுதான் மாவீரன் நெப்போலியன் வரலாற்றில் கூட தந்திரோபாய நடவடிக்கையாக பின்வாங்குவதும் பின்னர் அதனை மீட்பதும் நடந்துள்ளது. அத்தகைய போர் யுத்தியாகத்தான் பூநகரியை புலிகள் விட்டுக் கொடுத்திருப்பதாக நாங்கள் பார்க்கின்றோம். எமது மக்களிடமும் இந்த சிந்தனையோட்டம்தான் உள்ளது.

**புலிகளின் தலைவர் பிரபாகரனை நீங்கள் சந்தித்ததாக செய்திகள். தற்போதைய களச் சூழலில் அவர் என்ன மனநிலையில் இருக்கிறார்.**

கிளிநொச்சி மற்றும் தமிழ்ப் பிரதேசங்களுக்குள் போய் வந்தோம். அங்குள்ள கள நிலைமைகளை கண்டறிந்தோம். ஓமந்தை செக் போஸ்டினைக் கடந்துதான் நாங்கள் கிளிநொச்சிக்குப் போகவேண்டும். ஆனால் ஆமி எங்களைத் தடுத்தது. கெடுபிடி செய்தது. நாங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று சொல்வதை காதில் வாங்கிக் கொள்ளக் கூட இராணுவத்தினர் தயாராக இல்லை.

நாங்கள் உள்ளே செல்லவே போராட வேண்டி இருந்தது. கமரா, உடைமைகளை தடை செய்தனர். புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்திப்பதாக இருந்தது. ஆனால் வாய்ப்பு அமையவில்லை. பிரபாகரனை அடிக்கடி சந்திக்கும் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் மற்றும் முக்கிய தளபதிகளைச் சந்தித்து நிலைவரத்தையும் பிரபாகரன் மனநிலையையும் கேட்டோம்.

அப்போது அவர்கள் தற்போதைய களச் சூழல் எந்த வகையிலும் பிரபாகரனை சோர்வடைய வைக்கவில்லை. தன்னம்பிக்கையின் உச்சத்திலும் மன உறுதியுடன் திடமாகவும் இருக்கிறார். தந்திரங்கள், யுத்திகள் உள்ளிட்ட இராணுவம் தொடர்பான விவகாரங்களில் தான். அதிக நேரம் செலவிடுகிறார்.

அதே சமயம் தமிழீழத் தமிழர்களை கண்மூடித்தனமாக இராணுவம் படுகொலை செய்கிறதே என்கிற கவலையை அடிக்கடி வெளிப்படுத்துகிறார்.

கிளிநொச்சியைப் பாதுகாக்க சபதமேற்றிருக்கிறார் பிரபாகரன் என்று சொன்னார்கள்.

**ஆயுதங்களைக் கீழே போட்டால்தான் பேச்சுவார்த் தை என்கிறாரே ராஜபக்ஷ?**

அறப்போராகத் தொடங்கிய தமிழினச் சிக்கல் ஆயுதப் போராட்டமாக உருமாறியதற்கு சிங்களப் பேரினவாதத்தின் அடக்கு முறைகள்தான் காரணம். தமிழர்களுக்கு சிங்களவனும் சிங்கள அரசும் பயப்படுவதில்லை. அவர்கள் கைகளில் உள்ள ஆயுதத்திற்குத்தான் பயப்படுகிறார்கள். ஆயுதங்கள் இருக்கும் போதே தமிழர்களைக் கொன்றொழிக்கும் ராஜபக்ஷ ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டால்...?

தமிழர்களின் பாதுகாப்பே ஆயுதங்கள்தான். சிங்கள அரசை நம்பி ஆயுதங்களைக் கீழேபோட ஒரு தமிழன் கூட ஒப்புக் கொள்ள மாட்டான். (ச-5)

## யுத்தமும்...

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் ஊடாக அரசியல் தீர்வொன்று முன்வைக்கப்படும். விடுதலைப் புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இலங்கை அரசாங்கம் தமிழர்களுக்குத் தீர்வென்றை முன்வைக்காது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் சில தினங் களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

இந்தக் கருத்தை மறுத்துரைத்த அமைச்சர், புலிகள் இல்லாவிட்டாலும் அரசாங்கம் அரசியல் தீர்வை முன்வைக்கும் எனக் கூறினார். அதேநேரம் பூநகரியிலிருந்துவிடுதலைப்புலிகள் தந்திரோபாயமாகப் பின்வாங்கிவிட்டார்கள் எனக் கூறப்படுவதில் உண்மை இல்லையெனவும் இராணுவத்தினரின் கொடூரமான தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமலே அவர்கள் பூநகரியிலிருந்து வெளியேறினார்கள் எனவும் தெரிவித்தார். (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.